

சொத்து நஷ்டம் ஏற்பட்டிருக்குமென்று தெரியவருகிறது. அதாவது, இந்த வருஷத்து இந்திய சர்க்காரின் வருமானத்தில் ஏறக்குறையப் பாதி தொகை! இப்பேர்ப்பட்ட பெரிய விபத்து நேர்ந்ததின் காரணங்களைக் கண்டறிவதற்காக சர்க்கார் ஒரு விசாரணைக் கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்கள். விபத்தின் காரணங்களைக் கண்டு பிடிப்பதோடு இனிமேல் இம்மாதிரி கோரச் சம்பவங்கள் நேராமல் தடுக்கவும் வழி செய்யப்படுமென்று நம்புகிறோம். மேற்படி விபத்து நேர்ந்த பம்பாய் நகரின் பகுதிகளில் இரண்டு தெருக் காட்சிகளை மேலே காணலாம். ● ● ●

Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamorthy at the "Kalki" Press,
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.

இந்தியன் பாங்க்

லிமிடெட்.

தலைமை ஆபீஸ்:
"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"
வடக்கு பீச் ரோடு :: மதராஸ்

லோகல் ஆபீஸ்கள்:
எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி,
மயிலாப்பூர், தியாகராய நகர்,
புரசவாக்கம், மவுண்ட் ரோடு.

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ.	1,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	60,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் (31-12-43வரை)	ரூ.	28,90,385
ரிஸர்வ் நிதி	ரூ.	30,50,000
டெபாஸிட்கள்	ரூ.	8,13,62,549

N. கோபால அய்யர், செக்ரடரி.

ஹோமியோபதி

என்னும் நவீன வைத்திய சாஸ்திரத்தைத் தமிழிலோ ஆங்கிலத்திலோ, தங்கள் வீட்டிலிருந்தே படித்துத் தேர்ச்சி பெற்று தாங்கள் டாக்டராகலாம். முழு விபரங்கள் அடங்கிய தமிழ் அல்லது ஆங்கிலப் பிரகடனத்திற்கு எழுதவும்.

●

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்,

எக்ஸ்டென்ஷன் - கும்பகோணம்.

தென் இந்தியாவின் தலை சிறந்த ஹோமியோபதி ஸ்தாபனம்.



★ ★

P.A. ராஜ செட்டியார் பிரதர்


தந்தி: ராஜா - கோயமுத்தூர் - போன். 218A


இதோ!
நாகரீகத்திற்கேற்ற தங்க
நகைகள் வெள்ளி பாத்தி-
ரங்கள் சிறந்த முறை-
யில் கியாரண்டியுடன்
தயார் செய்கிறார்கள்
S.R.P.
முத்துசாமி செட்டியார்
நகை வியாபாரம், திருப்பூர்.
தந்தி: ஜுவெல்லர்.

கல்கி



KALKI மே 14, 1944 4 அணா



உங்கள் மனதிற்குகந்தது

டிலக்ஸ் டெனார் சிகரெட்டின் நறுமணத்தை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள். உத்தரவாதமுள்ள 100% பொருக்கின வர்ஜீனியா புகையிலை தான் டெனார் செய்ய உபயோகிக்கப் படுகிறது. இதுவே எல்லோரும் விரும்பி ரஸிப்பதற்கும், தொண்டைக்கு கெடுதல் செய்யாதிருப்பதற்கும் காரணம். மனோ ரம்மியமான இந்த சிகரெட்டை இன்றே வாங்கி நீங்கள் உபயோகியுங்கள்.


டி லக்ஸ் டெனார் சிகரெட்டு

ஜேம்ஸ் கார்ல்டன் லிட்., லண்டன்

tenor *is truly a de Luxe Cigarette*

JAMES CARLTON LTD, LONDON. EASTERN LICENCEES, POST BOX No. 470, CALCUTTA

தேயிலையின் சரிதம் - 9



வீட்டில் தேநீர் அருந்தும் வேளை.

யாத்திரையின் முடிவு

தேயிலை எங்கள் தொழிற்சாலையில் நன்று பக்குவப்படுத்தப்பட்டு பொட்டலம் செய்யப்பட்டபின் இந்தியா பூராகவும் எங்கள் விற்பனையாளர்கள் மூலம் விநியோகிக்கப்பட தயாராகிறது.

இந்தியா பூராவிலும் எல்லா முக்கியமான இடங்களிலும் இருக்கும் எங்கள் விற்பனை இலாகாக்களுக்கு எங்கள் தொழிற்சாலையிலிருந்து இடைவிடாமல் தூய்தான தேயிலை சேர்ப்பிக்கப்பட்டு வருகிறது. இவ்விடங்களிலிருந்து எங்கள் விற்பனையாளர்கள் அடிக்கடி தேயிலையை வியாபாரிகளுக்கு சேர்ப்பிக்கிறார்கள்.

இவ்விதம் புதிது புதிதாய் தேயிலை சில்லரை வியாபாரிகளுக்கு எப்பொழுதும் கிடைத்து வருவதால் எங்கள் தேயிலை உங்களுக்கு எப்பொழுதும் தூய்தானதாகவும் வாஸனையுடன் கூடினதாயும் கிடைத்து வருகிறது.

ப்ரூக் பாண்டு தேயிலையைக் கொண்டு பானம் தயாரிக்கும் பொழுதெல்லாம் தவறாமல் புதிதாக கொதிக்க வைத்த ஜலத்தை உபயோகித்து அதில் தேயிலையை நான்கு நிமிஷங்கள் போட்டு வைத்தால் போதுமானது.

ப்ரூக் பாண்ட்


குளிர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது!
நான் களைப்படையாமல் இருக்கிறேன்!
வினோலியா அதிக சுகத்தைக் கொடுக்கக் கூடிய சோப். அதை உபயோகிப்பதனால் ஒவ்வொரு ஸ்நானமும் குளிர்ச்சியையும், உத்ஸாகத்தையும் உண்டு பண்ணுகிறது. இந்த சோப்பின் வாசனை களைப்படைந்த நரம்புகளுக்கு சோர்வை போக்கி சுகத்தைக் கொடுக்கிறது.
உத்ஸாகத்தைக் கொடுக்கிறது!
VINOLIA WHITE ROSE SOAP
வினோலியா
ஒயிட் ரோஸ் சோப்பு
VWR. 16-50 TM
VINOLIA CO. LIMITED, LONDON, ENGLAND

ரியில் மனம் குமுறிக் கேட்டான் ரத்தினம்.

"விஷயத்தைச் சொன்னால் தானே புரியும், ரத்தினம்! நீ இருப்பது ஒரு சினிமா ஸ்டுடியோ! நான் ஒரு சினிமா டைரக்டர். 'அனாதை' என்ற படத்தில் நீ அனாதையாக நடிக்கப் போகிறாய். உனக்கு எந்த மாதிரி மேக்-அப் கொடுத்தால் நன்றாயிருக்கும் என்று பார்க்கத்தான் உன்னை இங்கே அழைத்துக் கொண்டு வந்தேன் ...... எங்கே, அந்தக் கல்லின்மேல் உட்கார்ந்து கொள். இந்தத் தோற்றத்தில்தான் உன்னை இப்பொழுது போட்டோ பிடித்துப் பார்க்க வேண்டும்" என்றார் டைரக்டர்.

'அனாதை' என்ற வார்த்தையைக் கேட்டதும் ரத்தினத்தின் தலையில் பேரிடி விழுந்தது போலிருந்தது. அவனை ஆசை காட்டி மோசம் செய்த விதி அப்பொழுது அவனைப் பார்த்துப் பரிகசிப்பது போலிருந்தது.

மறுபடியும் அவன் அந்தக் கந்தலைக் கட்டிக்கொள்ள வேண்டும் என்பதற்காகவா அந்த மனிதர் அவனிடம் அவ்வளவு பிரியம் காட்டினார்? தலைகுப்புறத் தள்ள வேண்டுமென்றே ஒரு வாரமாய் அவனைத் தூக்கி உயர வைத்திருந்த விதியின் சாகலத்தை நினைந்து நெஞ்சுருகினான்.

நடைப் பிணம் போல் நடந்து சென்று ரத்தினம் கல்லின்மேல் உட்கார்ந்து கொண்டான். அப்பொழுது டைரக்டர், "ரத்தினம்! உன் முகத்தில் பாவம் சரியாக இல்லை. தலையில் கை வைத்துக்கொண்டு இன்னும் கொஞ்சம் குனிந்து கொள்! உன் முகத்தில் துக்கம் பொங்க வேண்டும்" என்றார்.


ரத்தினத்திற்கு அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை. கண்களில் தாரை தாரையாய் நீர் பெருகிற்று: உதடுகள் துடித்தன.

"ஆஹா! ஆஹா! என்ன நடிப்பு! என்ன பாவம்! அப்பா, ரத்தினம்! இவ்வளவு கெட்டிக்காரத்தனத்தை இத்தனை நாளாய் எங்கே ஒளித்து வைத்துக் கொண்டிருந்தாய்" என்று டைரக்டர் சொல்லிக் கொண்டிருந்தார். அப்பொழுது காமிரா 'கிளிக்'கென்று சப்தித்தது.

"ரத்தினம்! போதும், எழுந்திரு!" என்றார் டைரக்டர்.

ரத்தினத்தின் காதில் அதெல்லாம் விழவில்லை. அப்படியே அந்தக் கல்லின் மேல் அவனும் ஒரு கல்லாய்ப் பேச்சு மூச்சில்லாமல் உட்கார்ந்திருந்தான்.

கோடை காலம்





தான். அந்த மாதிரி சாப்பாட்டை அவன் அதுவரை சாப்பிட்டதில்லை. அங்கே அவன் அனுபவித்த சுகத்தை அவன் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. அவன் சில தினங்களுக்கு முன் அனுபவித்த மகத்தான கஷ்டத்தையும், இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருந்த பரம சுகத்தையும் ஒப்பிட்டுப் பார்த்துத் திகைத்தான்.

ஆனால், அவன் உள்ளத்தின் அடியில் ஒரு கேள்வி ஓயாமல் எழுந்து கொண்டேயிருந்தது. "அந்த மனிதர் என்ன வேலை கொடுக்கப் போகிறார்? இது மர்மமாகவல்லவா இருக்கிறது?" என்பது தான் அந்தக்கேள்வி.

ஒரு வாரம் பறந்து சென்றது.

அன்று காலை அந்த மனிதர் அவனிடம் வந்தார். "ரத்தினம்! கிளம்பு! இன்றைக்கு உனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கிறது" என்றார். ரத்தினம் அவருடன் காரில் ஏறிக்கொண்டான்.

மோட்டார் வெகு தூரம் சென்று ஒரு பிரம்மாண்டமான கட்டிடத்தின் வாசலில் வந்து நின்றது. அந்த மனிதர் உள்ளே ரத்தினத்தை அழைத்துக் கொண்டு போனார். அவர்கள் வந்து சேர்ந்த அறையில் விதம் விதமான ஆடைகளும், ஆபரணங்களும், பெரிய பெரிய நிலைக்கண்ணாடிகளும் இருந்தன. அதையெல்லாம் பார்த்து ரத்தினம் பிரமித்துப் போய் விட்டான்.

"ரத்தினம்! அதோ கீழே கிடக்கும் வேஷ்டியையும் சட்டையையும் எடுத்துப் போட்டுக்கொள்" என்று சொல்லி ஒரு மூலையைச் சுட்டிக் காண்பித்தார் அந்த மனிதர். மூலையைப் பார்த்ததும் நெருப்பை மிதித்தவன் போலவும் நாக சர்ப்பத்தைக் கண்டவன் போலவும் துள்ளிக் குதித்தான் ரத்தினம்.

ஏனென்றால், அங்கே ஓரே அழுக்கான கிழிசல் சட்டை ஒன்றும், வேஷ்டி ஒன்றும் இருந்தன. அதைத் தொடக்கூட யாரும் கூசுவார்கள். எதற்காக அதை உடுத்திக் கொள்ளச் சொல்கிறார் என்றே அவனுக்குப் புரியவில்லை.

மிகவும் குழப்பம் அடைந்தவனாய் ரத்தினம் அவற்றை எடுத்து உடுத்திக் கொண்டான். பிறகு, யாரோ ஒரு ஆசாமி அவன் அருகில் வந்து அவன் அழகாக வாரிவிட்டிருந்த கிராப்பைக் கலைத்து அலங்கோலமாக்கினான். முகத்தில் பொய் மீசையையும் தாடியையும் வைத்தான். ரத்தினம் எதிரிலுள்ள கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்ததும் அவனுக்கு ஆத்திரமும் அழுகையுமாக வந்தது. தன்னை அழைத்துக் கொண்டு வந்து எதற்காக இந்தக் கோலம் செய்கிறார்கள்? இது பெரும் சூழ்ச்சியாக வல்லவா இருக்கிறது? — என்று நினைத்தான்.

அப்பொழுது அவனை அழைத்துவந்த மனிதர் ஓர் உடைந்த தகரக் குவளையைக் கொண்டுவந்து அவன் கையில் கொடுத்தார்.

"ஐயோ, இதெல்லாம் எனக்கு ஒன்றும் புரியவில்லையே!" என்று கடை

விதியின் வஞ்சனை

வஸந்தன்

சூரியன் அஸ்தமனமாகி விட்டது. ஊரோசை மெதுவாக அடங்கிக் கொண்டிருந்தது. ஆனால் சமுத்திரக் கரைக்குச் சற்றுத் தூரத்தில் ஒரு பாலத்தின்மீது சாய்ந்து நின்று கொண்டிருந்த இளைஞன் மனத்தில் வீசிய புயல் மட்டும் அடங்கவில்லை. அப்பொழுது மெதுவாக இருள் சூழும் சமயம். அந்த இளைஞன் உள்ளத்தையும் துக்கம் வந்து சூழ்ந்து கொண்டிருந்தது.

கப்பூரத்தினத்திற்கு ஒரு பக்கம் சிரிப்பும் ஒரு பக்கம் அழுகையுமாக வந்தது. யுத்த காலத்தில் எல்லோருக்கும் வேலை கிடைக்கும் என்கிறார்களே, பணம் காற்றில் பறக்கிறது என்கிறார்களே, இப்படியெல்லாம் எதற்காக இல்லாத பொல்லாத வார்த்தைகளைச் சொல்கிறார்கள்? தான் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டு இருக்கும் இந்தக் கண்றாவியைப் பார்த்துவிட்டுக் கூட எதற்காக இப்படி முழுப் பொய் சொல்கிறார்கள் என்று அவன் வியந்தான்.

உலகத்திலே எல்லோரும் மேற்கண்ட விதம் சொல்லும்போது, அது பொய்யாகப் போய்விடுமா? பலபேர் சொல்வது நிஜமாகவே இருக்கக் கூடாதா என்ற ஆசையில் அவனும் பல இடங்களுக்குப் போய் வேலை கேட்டான். 'இல்லை' என்று பலர் கையை விரித்து விட்டார்கள். சிலர், ஒரு வாரம் பத்து நாள் அவனை வேலையில் வைத்துக் கொண்டிருந்து விட்டு அதற்குப் பிறகு ஏதாவது காரணம் சொல்லி, அவனை வெளியில் அனுப்பிவிட்டார்கள். கடைசியில் பட்டாளத்திலாவது சேருவோம் என்று பார்த்தான். "உனக்குக் கண் பார்வை சரியாக இல்லை, போ!" என்று அங்கேயும் விரட்டி விட்டார்கள்!

"நான் ஏன் அனாதையாகப் பிறந்தேன்? எதற்காக நான் இப்படி உயிர் வாழ வேண்டும்? மனம் குளிர இதுவரை யாராவது ஒரு வார்த்தை சொன்னது உண்டா? அதோ அந்த சமுத்திரம் ஜில்லென்று குளிர்ந்திருக்குமே! அதிலாவது விழுந்து பிராணனை விடலாமல்லவா?"



இப்படி கப்பூரத்தினம் எண்ணமிட்ட போது, யாரோ பின்னாலிருந்து அவன் தோளை மிருதுவாக ஸ்பரிசிப்பதை உணர்ந்து அவன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். யாரோ ஒருவர் நவநாகரிகமான உடை அணிந்து அவன் அருகில் நின்றுகொண்டிருந்தார்.

"அப்பா! நீ யார்? எதற்காக இங்கே நின்று கொண்டிருக்கிறாய்? உன்னைப் பார்த்தால் பரிதாபமாகயிருக்கிறது எனக்கு" என்றார் அவர்.

ரத்தினம் உடனே அவர் பாதங்களில் விழுந்தான்.

"என்ன சொன்னீர்கள்? நிஜமாக என்னைப் பார்த்தால் உங்களுக்குப் பரிதாபமாக இருக்கிறதா? யாரும் இப்படிப் பரிதாபப் பட்டதில்லையே? நீங்கள் மட்டும் ஏன் இப்படிப் பரிதாபப்படுகிறீர்கள்?"

"இங்கே பார்! உனக்கு வேலை கிடைக்காவிட்டால நான் உன்னைக் காப்பாற்றுகிறேன். நீ என்னுடன் வந்து விடு" என்றார் அம்மனிதர்.

ரத்தினம் பிரமித்து நின்றுவிட்டான். அப்பொழுது ராணுவ லாரி ஒன்று அவர்களை இடித்துத் தள்ளுவதுபோல் அருகில் போகவே, அது கனவில் நடப்பதல்ல என்று நிச்சயம் உண்டாயிற்று. "வா, போகலாம்" என்று அந்த மனிதர் அன்புடன் அழைத்து அருகிலிருந்த காருக்குள் ரத்தினத்தை உட்கார வைத்தார்.

தம் பங்களாவுக்கு அழைத்துக் கொண்டு போனதும் அந்த மனிதர் ரத்தினத்தைப் பார்த்து, "அப்பா! தற்போதைக்கு நீ தங்குவதற்கு ஒரு ஹோட்டலில் ஏற்பாடு செய்திருக்கிறேன். உனக்கு என்ன செலவானாலும் எனக்கு 'பில்'லை அனுப்பி விடு. நான் பார்த்துக் கொள்கிறேன். இன்னும் ஒரு வாரம் கழித்து வந்து உன்னை வேலைக்கு அழைத்துக் கொண்டு போவேன். ஆனால் அது என்ன வேலை என்று இப்பொழுது கேட்காதே!" என்றார்.

ரத்தினம் ஹோட்டலுக்கு வந்து சேர்ந்-

இந்தச் சமயத்தில் சமையற்காரன் ஹாலின் பக்கமாக இருந்து அவர்களை எட்டிப் பார்த்தான். "என்னடா பார்க்கிறே?" என்று அதட்டினாள் மாலினி.

"ஐயா என்னமோ உங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறாரே, அதைப் பார்க்கிறேன்!" என்று சொல்லி, அவன் ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே அந்த இடத்தை விட்டு அகன்றான்.

அவன் சென்றதும், "உம்......மேஜையைத் திறந்து, அதற்குள் உம்மை ஒளித்து கொள்ளச் சொன்னாராக்கும்!" என்று மீண்டும் ஆரம்பித்தாள் மாலினி.

"இல்லை, தஸ்தாவேஜை எடுத்துக் கொண்டுவரச் சொன்னார்!"

"ஓஹோ!" என்று சொல்லிக் கொண்டே அவன் அருகில் வந்தாள் மாலினி.

வாஞ்சிநாதனை வெட்கம் பிய்த்துத் தின்றது. அவன் கையைப் பிசைந்து கொண்டு நின்றான்.

"இந்தனை சங்கோசத்தை வைத்துக் கொண்டு நீர் எப்படித் தான் வக்கீல் தொழில் செய்து கிழிக்கப் போகிறீரோ?" என்று சொல்லிக் கொண்டே சாவியை வீசி எறிந்தாள் மாலினி.

"நீ என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டு போ; சாவியைக் கொடுத்தால் சரி!" என்று நினைத்தானோ, என்னமோ? உடனே அவன் கீழே விழுந்த சாவியை எடுத்துத் தன் காரியத்தை முடித்துக் கொண்டு எடுத்தான் ஓட்டம்!


3

கல்யாணமான பிறகு, ஒரு நாள், 'நீ என்னமோ என்னைக் கல்யாணமே செய்து கொள்ள மாட்டேன் என்று உன் அப்பாவிடம் சாதித்துக் கொண்டிருந்தாயே! கடைசியில் என்னடா என்றால், காலக்கணக்கில் காதலித்தும் கல்யாணம் செய்து கொண்டவர்கள் கூட, இப்படி நம்மைப்போல் நேசமாக இருக்க மாட்டார்கள் போலிருக்கிறதே?" என்றான் வாஞ்சிநாதன்.

"உமக்கு என் அப்பாவைப் பற்றி ஒன்றும் தெரியாது. அதனால்தான் அப்படிக் கேட்கிறீர்கள். யார் என்ன சொல்கிறார்களோ, அதற்கு நேர்மாறாகச் செய்வதுதான் அவருடைய சுபாவம். அப்படித்தான் வேறு நாதியற்ற அவருடைய தங்கையின் மகள் ஒருத்தி இங்கே வளர்ந்து வந்தாள். அவள் உம்மைப் போல்தான் 'பிராக்டீ'ஸுக்காக வந்திருந்த ஒருவரைக் காதலித்தாள். அவள் இஷ்டப்படி என்னுடைய அப்பா அவனைக் கல்யாணம் செய்து கொடுத்தாரென்று நினைக்கிறீரா? அதுதான் கிடையாது. அவருடைய இஷ்டப்படி அவள் விரும்பாத வரனுக்கு அவளைக் கல்யாணம் செய்து கொடுத்தார். அதனால் தான் எனக்கும் வேறு எங்கேயாவது வரன் தேடிவிடப் போகிறாரோ என்று பயந்து, உம்மை விரும்பாதவள்போல் நான் பாசாங்கு செய்தேன்!" என்றான்.

"அப்படியானால் இந்த விஷயத்தில் உனக்கும் எனக்கும் ரொம்ப ஒற்றுமை இருந்திருக்கிறது. அதற்காகத்தானே நானும் 'நல்ல பிள்ளை' என்று பெயர் வாங்குவதற்காக அந்தனை சங்கோசத்துடன் நடந்துகொண்டேன்!" என்றான் வாஞ்சிநாதன்.

கடைசியில், "ராஜதந்திரத்துக்குப் பிரிட்டிஷார் கூட நம்மிடம் பிச்சை வாங்க வேண்டும் போலிருக்கிறதே!" என்று சொல்லி இருவரும் சேர்ந்து சிரித்தார்கள். அந்தச் சிரிப்பின் எதிரொலி அவர்கள் சொன்னதைக் கேட்டுக் கரகோஷம் செய்வது போலிருந்தது!



★

சந்தேகமில்லை!

"இவ்வளவு பிரகாசமா யிருக்கிறதிலுமே எதிரில் வருகிறது நிச்சயமாய் கார். வேறாக இருக்க முடியாது. அது சந்தேகமின்றி நம்மைப் போன்ற மற்றொரு ஏ. ஆர். பி. ஆசாமிதான்!"

★

அன்றைக் கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம் போல் தோன்றும்.

வாழ்க்கையில் பெண்கள் தங்களுடைய ஜீவனத்திற்கு எப்பொழுதுமே புருஷர்களைத்தான் நம்பிக் கொண்டிருக்க வேண்டு மென்ற விபரீதமான சமுதாயச் சட்டம் பாரிஸ்டர் பரந்தாமனுக்குப் பிடிப்பதில்லை. அதன் பயனாகத்தான் மாலினி வெறும் மாலினியாயில்லாமல், மாலினி எம். பி., பி. எல். ஆக இருந்தாள்.

அவரிடம் வக்கீல் தொழிலில் அனுபவம் பெற வந்தவன்தான் வாஞ்சிநாதன். சிறு வயதிலேயே தந்தையை இழந்துவிட்ட அவனைத் தாயார் எப்படியோ வக்கீல் பரீட்சையில் தேற வைத்தாள். அவன் வருவாயில் ஒரு நாள் கூட வயிறு வளர்க்கக் கொடுத்து வைக்காமல், அவள் இந்த உலக வாழ்வை நீத்தாள். அவனைத்தான் தம் மகளுக்கு வரனாகத் தேர்ந்தெடுத்திருந்தார் பாரிஸ்டர் பரந்தாமன்.



2

வாஞ்சிநாதன் மிகவும் சங்கோசப் பிராணியாயிருந்தான். அவன் ஏனோ இந்தக் காலத்துப் பிள்ளையாயில்லை. மாலினியை அவன் கண்ணெடுத்துக் கூடப் பார்க்க மாட்டான். எப்பொழுதாவது அவள் அவனைப் பார்த்தாலும், இவன் வேறு எங்கேயோ பார்க்க ஆரம்பித்து விடுவான். தப்பித் தவறி அருகில் வந்து விட்டால் அவள் அந்த இடத்தை விட்டுப் போகும் வரை, அவன் ஆடு திருடிய கள்ளன் மாதிரி விழித்துக் கொண்டிருப்பான்.

ஒரு நாள் ஏதோ ஒரு தஸ்தாவேஜுக் கட்டை மறந்து வைத்துவிட்டுக் கோர்ட்டுக்குச் சென்று விட்டார் பரந்தாமன். அங்கே சென்றதும் அவருக்கு நினைவு வந்தது. உடனே தம்முடன் வந்திருந்த வாஞ்சிநாதனைக் கூப்பிட்டு, "வீட்டுக்குப் போய், மாலினியிடம் சாவி இருக்கிறது; அதை வாங்கி மேஜையைத் திறந்து, அதற்குள் இருக்கும் தஸ்தாவேஜை எடுத்துக்கொண்டு வா" என்றார்.

அவருடைய உத்தரவைத் தட்டிப்பேச முடியாத வாஞ்சிநாதனுக்கு என்ன செய்வது என்று ஒன்றும் புரியவில்லை. எப்படியோ மனதைத் திடப்படுத்திக் கொண்டு வீட்டுக்குச் சென்றான். அங்கே சென்றதும் மாலினியை நேரில் பார்த்துச் சாவி கேட்க அவனுக்குத் தைரியம் வரவில்லை. சமையற்காரனைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொன்னான். அவன் அவளிடம் சென்று சாவி கேட்டான். "அவருக்கு நீ என்ன, காரியதரிசியா?" என்று எரிந்து விழுந்தாள் மாலினி.

சமையற்காரன் பதில் பேசாமல் திரும்பி வந்து விட்டான்.

வாஞ்சிநாதனுக்குத் தர்ம சங்கடமாய்ப் போய் விட்டது. வந்த வழியே திரும்பி விடலாமா என்று கூட நினைத்தான். ஆனால் அவர் அதற்காகக் காத்துக் கொண்டிருப்பாரே?

துணிந்து அவன் அறையின் பக்கம் சென்றான். அந்த அறையின் கதவுக்கு முன்னால் நின்றுகொண்டு, "உன்னிடம் சாவி இருப்பதாக அப்பா சொன்னார்......" என்று ஆரம்பித்தான்.

"ஆமாம்; அதற்கு என்ன?"

"அந்தச் சாவியை வாங்கி......"

"அந்தச் சாவியை வாங்கி......"

"மேஜையைத் திறந்து......"

"மேஜையைத் திறந்து......"



மாலினி

விந்தன்

★

"மாலினி! நான் சொல்வதைக் கேள்: நீ வாழ்க்கையில் சந்தோஷம் அனுபவிப்பதை நான் விரும்புவேனா, அல்லது சஞ்சலம் அனுபவிப்பதை விரும்புவேனா?"

"சந்தோஷம் அனுபவிப்பதைத்தான் விரும்புவீர், அப்பா!"

"பின் ஏன் நான் சொல்லும் வரனைக் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன் என்கிறாய்?"

"எனக்கென்னமோ அவரைக் கல்யாணம் செய்துகொள்ள இஷ்டமில்லை, அப்பா!"

"ஏன்?"

"அதைச் சொன்னால் அதிகப் பிரசங்கி என்பீர்கள்!"

"அந்தப் பெயர் எடுக்க உனக்கு இஷ்டமில்லையல்லவா? அதனால்தான் நான் சொல்வதைக் கேள் என்கிறேன். வேறு எங்கேயாவது வரன் தேடினால், அவன் கல்யாணமானவுடனே உன்னைத் தன்னுடன் கூட்டிக்கொண்டு போய் விடுவான். இந்தத் தள்ளாத வயதில் நான் உன்னை எப்படி அம்மா பிரிந்திருக்க முடியும்?"

"அதற்காக?"

"அவன் அநாதை. வேறு எங்கேயும் போவதற்கு வழியில்லாதவன். அவனை நீ கல்யாணம் செய்துகொண்டால், அவன் நம் வீட்டிலேயே உன்னுடன் இருந்துவிடுவான். நானும் என்னுடைய கடைசி காலத்தை உங்களுடன் சந்தோஷமாகக் கழித்து விடுவேன்."

"என்னமோ போ, அப்பா! எனக்கு அதெல்லாம் ஒன்றும் பிடிக்கவில்லை. அப்புறம் உங்கள் இஷ்டம்."



இந்தக் கடைசி வார்த்தையைக் கேட்டதுந்தான் பாரிஸ்டர் பரந்தாமனின் மனம் சற்று நிம்மதி அடைந்தது.

* * *

பாரிஸ்டர் பரந்தாமன் பிரசித்தி பெற்றவர். அவருடைய ஒரே மகள்தான் மாலினி. சிவப்புக் கரை போட்ட வெள்ளைப் புடவையைத்தான் அவள் எப்பொழுதும் அணிந்து கொண்டிருப்பாள். அவளுடைய படர்ந்த முகம், அவளுக்குத் தெரியாமல் எப்பொழுதும் மௌனமாகப் புன்னகை புரிந்து கொண்டிருக்கும். ஒரு நகையும் அணியாமலிருந்தது கூட, அவளுக்கு ஒரு தனி அழகாய்த் தானிருந்தது. ஆனால் அந்தச் சின்னஞ்சிறு குங்குமப் பொட்டு மட்டும் அவளால் அழகு பெற்று, அவளுடைய நெற்றியில் சதா இருந்து கொண்டிருக்கும். என்ன தான் வாரி விட்டாலும் காற்றில் அலைந்து கொண்டிருக்கும் அந்தச் சுருண்ட கேசத்தின் அழகையே



• • • ஒரு மாதத்துக்கு முன்பு பம்பாய் நகரில் ஏற்பட்ட பிரம்மாண்ட வெடி விபத்தைக் குறித்து நேயர்கள் அறிந்திருப்பார்கள். நேரில் பார்த்தவர்கள், ''ஆயிரம் எதிரி விமானம் சேர்ந்தாற்போல் வந்து குண்டு போட்டிருந்தால் எப்படியோ அதைக் காட்டிலும் கோரமான காட்சி''களைப் பார்த்ததாகத் தெரியப் படுத்துகிறார்கள். விபத்து நேர்ந்த பகுதியில் மூன்று வாரத்துக்குப் பிறகும் புகை சூழ்ந்திருந்ததாகக் கூறுகிறார்கள். துறைமுகத்தில் ஆரம்பமாகிப் பரவிய இந்த விபத்தினால் மொத்தம் 150 கோடி ரூபாய் பெறுமான



யமனுக்கும் ஓர் யமன்

நாடோடி

[சென்னை மௌண்ட் ரோட்டில் ஒரு மோட்டார் யமன் வெகு வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. மோட்டார் யமனைக் கண்டு துள்ளிக் குதித்தும் பாத சாரிகள் ரஸ்தா ஓரத்தில் உள்ள மரங்களின் மீது மோதிக் கொள்கிறார்கள். இதைக் கண்டு மோட்டார் யமன் கர்வப் படுகிறது. அந்தச் சமயத்தில் பின்னால் ஒரு ராணுவ லாரி வெகு வேகமாக வரவே, அதைக் கண்டு மோட்டார் யமன் பயந்து, பக்கத்தில் பாதசாரிகளுக் கென்று கட்டப்பட்டிருக்கும் மேடைமீது ஏறுகிறது. ஆனால் எதிரே உள்ள ஒரு மரம், "எதற்காக இத்தனை அவசரம்?" என்று அதைப் பார்த்துக் கேட்பதுபோல் 'டங்' என்ற மோதலுடன் அதை நிறுத்துகிறது. அடுத்த கணமே ராணுவ லாரி இதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு பக்கத்தில் வந்து நிற்கிறது.]

ராணுவ லாரி:—ஐயா, மோட்டார் வண்டியாரே! எதற்காக இப்படி பட்டப் பகலில் தெருவில் உள்ள சர்க்கார் மரத்தைப் பெயர்க்கப் பார்க்கிறீர்? யாராவது போலீஸ்காரன் பார்த்தால் பிடித்துக் கொள்ளப் போகிறான்!

மோட்டார் யமன் (தலையைத் தடவி விட்டுக்கொண்டே):—ஆமாம், ஐயா! உமக்கு எல்லாம் வேடிக்கையாகத்தான் இருக்கும். என்னைப்போல் நீரும் மரத்தின் மீது மோதிக்கொண்டால் அப்பொழுது தெரியும்.

ராணுவ லாரி:—என்னமோ நான் மரத்தின் மீது மோதிக்கொண்டது கிடையாதது போலல்லவா பேசுகிறீர்? இதுவரையில் நான் எத்தனை மரங்கள், எத்தனை குப்பைத் தொட்டிகள், எத்தனை போலீஸ்காரர்கள் மீது மோதிக் கொண்டிருப்பேன்! அது இருக்கட்டும், உம்மை யார் ஐயா மரத்தின் மீது மோதிக் கொள்ளச் சொன்னது? ரஸ்தாவில் போகாமல் எதற்காகப் பாதசாரிகளுக் கென்று கட்டப்பட்டிருக்கும் மேடை மீது ஏறினீராம்?

மோட்டார் யமன்:—எல்லாம் உமக்குப் பயந்துகொண்டுதான். மேடை மீது ஏறினதால் இப்பொழுது தலைக் காயத்தோடு விட்டது. ரஸ்தாவில் போயிருந்தால் இத்தனை நாழி நீர் என்னைப் பைசல் செய்திருக்க மாட்டீரா?

ராணுவ லாரி ('ஹஹ்ஹஹ்ஹா' என்று சிரித்துக்கொண்டு):—ஆ! இப்பொழுது தெரிகிறதா, யார் பெரிய யமன் என்று? என்னமோ பாதசாரிகளைக் கொல்வதில் உம்மை யாரும் மிஞ்ச முடியாது என்று இத்தனை நாளும் கர்வப்பட்டுக் கொண்டிருந்தீரே, இப்பொழுது என்ன சொல்கிறீர்?

மோட்டார் யமன்:—நான் என்ன சொல்லக் கிடக்கிறது, யமதர்ம மகாராஜாவே! ஆனால்.......

ராணுவ லாரி:—ஆனால் என்ன?

மோட்டார் யமன்:—ஆனால், ஏழைகளாகிய எங்கள் மீது உமக்கு ஏன் இத்தனை கோபம்? எதற்காக இப்படி எங்களைக் கண்டதும் மோதிக் கொன்று தீர்க்கிறீர்?

ராணுவ லாரி:—அதுவா, அதற்குத்தான் 'மோட்டார் கர்வ பங்கம்' என்று பெயர்!

மோட்டார் யமன்:—மோட்டார் கர்வ பங்கமா? எதற்காக? நாங்கள் எதைக் குறித்துக் கர்வப் பட்டோம்?

ராணுவ லாரி:—உங்களைக் கண்டால் பாதசாரிகள் நடுங்கி, ஓடி ஒளிகிறார்கள்,

உங்களுக்கு மோட்டார் யமன் என்று கூடப் பெயர் கொடுத்து விட்டார்கள் என்று நீங்கள் கர்வப் பட்டுக் கொண்டிருந்தீர்கள் அல்லவா? அந்த கர்வத்தை அடக்குவதற்காகத்தான் நாங்கள் கிளம்பி யிருக்கிறோம். இப்பொழுது பாருங்கள், பாதசாரிகள் உங்களைக் கண்டு நடுங்குவதைவிட எங்களைக் கண்டு அதிகமாக நடுங்குகிறார்கள். நீங்கள் மோதினால், பாதசாரிகளுக்கு உயிர் போய்விடும் என்கிற நிச்சயம் இல்லை. காலோ, கையோ ஒடிவதுடன் தப்பித்துக் கொள்கிறவர்கள் எத்தனையோ பேர்! ஆனால் எங்கள் விஷயம் அப்படியில்லை. நாங்கள் மோதினால் ஆள் பைசலாக வேண்டியதுதான். இன்னும் நாங்கள் ஏழை, பணக்காரன் என்கிற வித்தியாசமே பார்ப்பதில்லை. எல்லாப் பாதசாரிகளும் எங்களுக்கு ஒன்றுதான். ஏன், பாதசாரிகள் வரையில் போவானேன்? உம்மைப் போன்ற மோட்டார்களை எங்களைக் கண்டு நடுங்கும்படி செய்துவிட்டோமா, இல்லையா?

மோட்டார் யமன்:— யமதர்ம ராஜனே! எங்கள் கர்வத்தை அடக்கி விட்டீர்கள் என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அதற்காகப் பாதசாரிகளைத் தாங்கள் கொல்வதுதான் எனக்குத் துளிக்கூடப் பிடிக்கவில்லை.

ராணுவ லாரி:—ஏது, திடீரென்று உமக்குப் பாதசாரிகளின் மீது அத்தனை பச்சாத்தாபம் ஏற்பட்டு விட்டது!

மோட்டார் யமன்:—பின் ஏற்படாமல் என்னமா யிருக்கும்? நாங்கள் ஆடிக்கு ஒன்று, அமாவாசைக்கு ஒன்று என்று இந்த ரீதியில்தான் மனிதர்களை மோதித் தள்ளிக் கொண்டிருந்தோம். தாங்கள் என்னடாவென்றால் மனிதர்களை மோதித் தள்ளாத நாளெல்லாம் நாளே என்று கருதுவதுபோல் தினம் யாரையாவது மோதித் தள்ளிக் கொண்டும் யாரையாவது மேல் உலகத்துக்கு அனுப்பிக்கொண்டும் இருக்கிறீர். ஏது, தாங்கள் இப்பொழுது போகும் ரீதியைப் பார்த்தால் எங்களுக்கு வெகு சீக்கிரம் நல்ல பெயர் வாங்கிக்கொடுத்து விடுவீர்கள் போல் தோன்றுகிறதே!

ராணுவ லாரி:—எத்தனை நல்ல பெயர் வாங்கிக் கொடுத்தால்தான் உமக்கு நன்றி யிருக்கிறது! உங்களுக்கு நிறைய பெட்ரோல் கொடுக்காமல், இருக்கிற எல்லாப் பெட்ரோலையும் நாங்களே சாப்பிட்டு விடுகிறோம் என்று குறை கூறிக் கொண்டிருக்கிறீர்கள்? எவ்வளவுக் கெவ்வளவு உமக்குப் பெட்ரோல் குறைவாகக் கொடுக்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு நீர் தெருவில் அதிகமாக நடமாட முடியாது. அவ்வளவுக் கவ்வளவு உமக்கு நல்ல பெயர் கிடைக்கும். இந்த விஷயத்தை நீர் நினைத்துப் பார்த்தால்தானே?

மோட்டார் யமன்:—நினைத்துப் பார்த்தேன். ஆனால்—

ராணுவ லாரி:—ஆனால் என்ன?

மோட்டார் யமன்:—ஆனால் இப்பொழுது மரத்தில் போய் முட்டிக் கொள்ளும்படி செய்து விட்டீரே! அதற்குள்ள கஷ்ட ஈடுக்கு ஏதாவது—

ராணுவ லாரி:—என்ன கஷ்ட ஈடா? நான் உம்மைக் கொல்லாமல் விட்டேனே, அதுவே பெரிய கஷ்ட ஈடு! ஊம், என்ன பேசாமல் இருக்கிறீர்? போம், வழியைப் பார்த்துக்கொண்டு!

[‘குர்ர்’ என்ற சத்தம் கேட்கிறதே யொழிய, மோட்டார் புறப்படும் வழியாயில்லை.]

என்ன இன்னும் பேசாமல் இருக்கிறீர்? போகிறீரா, இல்லை, ஒரு முட்டுக் கொடுக்கட்டுமா?

[இதைக் கேட்டதும் செத்தோம், பிழைத்தோம் என்று மோட்டார் யமன் அங்கு வந்த ஒரு பாதசாரியைத் தூக்கிக் கொண்டு ஓடுகிறது. மோட்டார் யமனை ராணுவ லாரி துரத்திக்கொண்டு ஓடுகிறது. ராணுவ லாரி மோட்டார் வண்டியை முந்திக் கொள்ளப் போகும் சமயத்தில் எதிரே ஒரு டிராம் வண்டி வருகிறது. ராணுவ லாரியும் டிராம் வண்டியும் மோதிக்கொள்ளவே, ராணுவ லாரி பக்கத்தில் உள்ள மோட்டார் மீது சாய்கிறது. மோட்டார் தெரு ஓரத்தில் நிலக் கடலை கூறு கட்டி விற்றுக் கொண்டிருக்கும் கிழவி மீது விழுந்தது. அவள் ஆத்மாவுக்கு இம் மாய உலகினின்றும் விடுதலை அளிக்கிறது.]



நம்ப வேண்டாம்!

என். என்.

நானும் இவ்வளவு வருஷங்களாகப் பார்த்துக் கொண்டு வருகிறேன்: இந்த உலகத்தில் நாம் காண்பதெல்லாம் மாயத் தோற்றங்களென்பதும், நாம் கண்ணால் பார்க்கும் விஷயங்களையே நம்மால் நம்ப முடிவதில்லையென்பதும், நம்பக்கூடிய விஷயங்கள் நம் கண்ணில் தென்படுவதில்லையென்பதும் முற்றிலும் உண்மைதான். வெளுத்ததெல்லாம் பாலல்லவென்பதையும், இனிப்பவையெல்லாம் சர்க்கரையல்லவென்பதையும் நான் பரிபூரணமாக உணர்ந்திருக்கிறேன்.

என் வார்த்தையில் நம்பிக்கையில்லையானால், கீழே சில உதாரணங்கள் தருகிறேன். அவை என் சொந்த அனுபவத்திலிருந்து தெரிந்துகொண்ட உண்மைகள்.

எப்பொழுதும் அங்கவஸ்திரமோ மேல் துண்டோ அணியாத ஒருவர் என்றைக்காவது அங்கவஸ்திரத்தைப் போட்டுக்கொண்டு போவதைப் பார்த்தால், அவர் நாகரிகத்தில் முன்னேற்றமடைந்திருப்பதாக எண்ணிவிடாதீர்கள். உண்மை என்னவென்றால், அன்றைக்கு அவர் அணிந்திருக்கும் சட்டையில் ஏதாவது கிழிசல் இருக்கும். அதை மறைப்பதற்காகவே அவர் அங்கவஸ்திரத்தின் உதவியை நாடியிருக்கிறார் என்று தெரிந்து கொள்ளுங்கள்!

சற்று வயதான மனிதர் ஒருவர் எப்பொழுதும் தலைப்பாகை யணிந்து கொண்டு வெளியே செல்வதைப் பார்த்து விட்டு, அது அவருடைய வழக்கம் போலிருக்கிறது என்று தவறாக நினைக்காதீர்கள். விஷயம் என்னவெனில், அவருடைய தலை மயிர் ஒன்றிரண்டு இடங்களில் நரைத்திருப்பதை அவர் மறைக்கப் பார்க்கிறார் என்பதை அறிந்து கொள்ளுங்கள்!

எப்பொழுதும் ஒன்பதணா டிக்கெட் வாங்கிக்கொண்டு சினிமா பார்க்கும் வழக்கமுடையவர் ஒரு நாள் ஒன்றரை ரூபாய் வகுப்பில் உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்த்தால், அவர் அன்று தன் சொந்தச் செலவில் சினிமா பார்க்கவில்லையென்பதையும், யாரோ அவரை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார்களென்பதையும் உணர்ந்து கொள்ளுங்கள்!

விடுமுறை!



உபாத்தியாயர் மனைவி:— இந்தாருங்கோ! பள்ளிக்கூடம் சாத்தினதிலிருந்து இப்படி புஸ்தகத்தையே விரலாலே தொடாமல் சதா கொட்டுக் கொட்டென்று உட்கார்ந்து கொண்டிருந்தால், வருகிற வருஷம் உங்களிடம் வரும் பிள்ளைகளுக்கு என்னமாய்ப் படிப்பு வரும் என்று கேட்கிறேன்?


ஒருவர் எப்பொழுதும் கையில் குடையுடன் வெளியே செல்வதைப் பார்த்தால், அவரிடம் கைத்தடி இல்லையென்றும், அதற்குப் பதிலாகத்தான் குடையை உபயோகிக்கிறார் என்றும் புரிந்து கொள்ளுங்கள்.

அவசியமே இல்லாத ஒரு சந்தர்ப்பத்தில், ஒருவர் மிகவும் விலையுயர்ந்த ஒரு வேஷ்டியையோ, சட்டையையோ அணிந்து கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு மலைக்காதீர்கள். உண்மை என்னவென்றால், அன்று அவர் வீட்டுக்கு வரவேண்டிய கிரமப்படி வண்ணான் வந்திருக்க மாட்டான். வேறு துணியில்லாமல் அவர் உள்ளே வைத்திருந்த அந்த வேஷ்டியையோ, சட்டையையோ எடுத்து அணிந்திருப்பார்!

கடைசியாக ஒரு வார்த்தை: "நம்ப வேண்டாம்" என்று நான் உங்களுக்கெல்லாம் உபதேசம் பண்ணுவது ஏதோ உங்கள் நன்மையை உத்தேசித்து என்று நம்பி மோசம் போகாதீர்கள். எழுதுவதற்கு ஏதாவது விஷயம் வேண்டாமா, அதற்காகத்தான்!


யார் எதற்கெடுத்தாலும் குழந்தைகளுக்கு மிகக் கடுமையான தண்டனை கொடுத்து வந்தார். பையன்கள் சின்னப் பிசகு செய்து விட்டால்கூட அவர்களைக் கோதண்டத்தில் மாட்டி விடுவார்.

வழியில் ஒரு மரத்தின் மேலிருந்து முயல்குட்டி நடக்க முடியாமல் கஷ்டப்படுவதைக் குரங்குக் குட்டி பார்த்தது. அதற்கு ஆத்திரமாக வந்தது. பயத்தினாலேயே முயல் குட்டி எங்கே பிராணனை விட்டு விடுமோ என்று அது நினைத்தது. இந்த வாத்தியாருக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்று நினைத்துத் தன் பிராணஸ்நேகிதரான நரியாரின் வீட்டிற்கு அது ஓடிற்று. ஏனென்றால், அதற்குப் புத்திசாலித்தனம் உண்டு. விஷயத்தைக் கேட்டதும், எப்படியாவது முயல் குட்டியை வாத்தியாரிடமிருந்து



காப்பாற்றிவிட வேண்டும்; அந்தக் காட்டை விட்டே கரடியாரை ஓட்டி விட வேண்டும் — என்று தீர்மானித்தது நரி.

மறு நாள் காலையில் சொல்லாமல் கொள்ளாமல் கரடியாரின் பள்ளிக்கூடத்திற்கு ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் தடாபுடலாக வந்தார். அவர் பின்னோடு இரண்டு உடுப்புப் போட்ட ஜவான்கள் வந்தார்கள். திடீரென்று பள்ளிக்கூடத்திற்கு இன்ஸ்பெக்டர் வரவே கரடி வாத்தியாருக்குத் தூக்கி வாரிப் போட்டது. கை கால்களெல்லாம் வெலவெலத்துப் போய்விட்டன. பள்ளிக்கூடக் குழந்தைகளோ தாறுமாறாகக் கண்டபடி வாத்தியாரின் தண்டனைக்குள்ளாகி யிருந்தன. ஒரு



கோதண்டத்தில் மாட்டப்பட்டிருந்தது மான் குட்டி. ஒரு ஆட்டுக் குட்டியின் காலில் விலங்கு பூட்டப்பட்டிருந்தது. முயல் குட்டியைத் தூணில் கயிற்றால் கட்டிப் பிரம்பால் வெளுத்துக் கொண்டிருந்தார் வாத்தியார். பார்த்தார் இன்ஸ்பெக்டர். "இது என்ன பள்ளிக்கூடமா, கொலைக் களமா? நான் கவர்ன்மெண்டிலிருந்து உத்தரவு கொண்டு வந்திருக்கிறேன். குழந்தைகளை நீர் ரொம்பவும் ஹிம்சைப் படுத்துவதாக 'ரிபோர்ட்' வந்திருக்கிறது. நாளையிலிருந்து உம்மை வேலையினின்றும் நீக்கப்பட்டிருக்கிறது" என்றார் இன்ஸ்பெக்டர்.

அப்பொழுதே குரங்கு ஜவான்கள் குழந்தைகளின் கட்டுகளை நீக்கினார்கள். கரடி வாத்தியார் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி விட்டார். இன்ஸ்பெக்டர் வேஷம் போட்ட நரி, தன் தந்திரம் பலித்ததைப் பற்றி மிகவும் சந்தோஷமாகக் குதித்துக் கூத்தாடிற்று. முயல் குட்டியும் குரங்குக் குட்டியும் அடைந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை.



திண்ணைப் பள்ளிக்கூடம்

செல்லம்



காட்டில் கரடியார் ஒரு திண்ணைப் பள்ளிக் கூடம் வைத்திருந்தார். அதற்குக் காட்டில் உள்ள குழந்தைக ளெல்லாம் வந்து சேர்ந்தன. முயல் குட்டியும் குரங்குக் குட்டியும் பிரதி தினமும் சேர்ந்து தான் பள்ளிக்கூடம் போகும். ஆனால் முயல் குட்டியின் அம்மா, "குரங்குக் குட்டியுடன்




சேராதே; உனக்கும் குரங்குத் தனம் வந்துவிடும்" என்று கண்டிப்பாள். முயல் குட்டி அதை லட்சியம் செய்வ தில்லை. அது அம்மாவுக்குத் தெரியா மல் குரங்கோடு சேர்ந்து பள்ளிக்கூடம் போகிறேனென்று பொய் சொல்லி விட்டு, அதனுடன் சேர்ந்து மரம் ஏறிச் சுற்றித் திரிய ஆரம்பித்தது.

முயல் குட்டியின் துஷ்டத்தனம் கரடி வாத்தியாருக்குத் தெரிந்தது. அவர் கையில் பிரம்புடன் வேகமாக முயல் குட்டியைத் தேடிக்கொண்டு வந்தார். ஒரு மரக்கிளையில் குரங்குக் குட்டியோடு சேர்ந்து முயல் குட்டியும் தலைகீழாகத் தொங்கிக் கொண் டிருந்தது. வாத்தியார் அதன் காதைப் பிடித்துத் தூக்கி, "போக்கிரிப் பயலே! விஷமமா பண்ணுகிறாய்?" என்று முதுகில் நாலு அறை அறைந் தார். குரங்குக் குட்டி மட்டும் வாத்தி யார் கையில் அகப்படாமல் மரக்கிளை களில் தாவி ஓடிவிட்டது.

முயல் குட்டி அழுதுகொண்டே கரடியாருடன் பள்ளிக்கூடம் சென் றது. அதற்கு ரொம்பத் துக்கமா யிருந்தது.

"அடடா! நானும் குரங்குக் குட்டி யாகப் பிறந்திருக்கப்படாதா? முயல் குட்டியாக இருந்ததால்தானே மரக் கிளைகளில் தாவித் தப்பித்துக் கொள்ள முடியவில்லை!" என்று எண்ணி அது வருந்திற்று.

வாத்தியார் தனக்கு என்ன தண் டனை கொடுக்கப் போகிறாரோ என் பதை நினைக்க நினைக்க முயல் குட்டி யின் உடம்பு வெட வெட வென்று நடுங்கிற்று. ஏனென்றால், கரடி வாத்தி



காலக்ஷேபம்

தேர்ந்த விஷயம்

ஒருவன் (மற்றொருவனிடம்):—டேய்! அவன் என்னை 'முட்டாள்' என்று சொன்னதற்கு, நான் அவனை என்ன செய்தேன் தெரியுமா?

மற்றொருவன்:—அவன் சொன்னதற்குத் தகுந்தாற்போல் செய்திருப்பாய்!

—அ. சுப்பிரமணியன்.

●

உலக அதிசயம்!

கிருஷ்ணன்:—உத்தியோகம் ஆவதற்காகப் பேட்டி காணுவதற்கு டில்லிக்குப் போகிறேன். அப்படியே ஆக்ராவுக்குப் போய் தாஜ்மஹாலைப் பார்த்து விட்டு வரலாம் என்று இருக்கிறேன்.

புதிய நண்பன்:—தாஜ்மஹால் அப்படி ஒன்றும் பிரமாதமான அதிசயம் இல்லை என்று என் அண்ணன் சொல்கிறானே!

கிருஷ்ணன்:—அப்படியானால் முதலில் நான் உன் அண்ணனைப் பார்க்க வேண்டும்!

—எம். கோபாலகிருஷ்ணன்.

●

என்ன பிரயோஜனம்?

மாஜிஸ்டிரேட்:—வாதி உன்னைத் திட்டியதற்குப் பதிலாக நீ அவர் கன்னத்தில் அறைந்தாயாமே!

பிரதிவாதி:—நானும் திட்டி என்ன பிரயோஜனம்? அவருக்குத்தான் காது செவிடாயிற்றே! —பாலகிருஷ்ணன்.

●

நல்ல யோசனை!

மில் முதலாளி (குமாஸ்தாவிடம்):—எல்லா வேலையாட்களும் பார்க்கும்படி ஒரு நோட்டீஸ் ஒட்ட வேண்டும். அதை எங்கே ஒட்டலாம்?

குமாஸ்தா:—கடிகாரத்தின் மீது ஒட்டிவிட்டால் எல்லோரும் அவசியம் பார்ப்பார்கள்!

—ஏ. ராமநாதன்.

தெரியாமற் போச்சே!

தாத்தா:—அடே கந்தா, மூன்றும் இரண்டும் சேர்த்து எத்தனை?

கந்தன்:—ஐந்து, தாத்தா!

தாத்தா (சந்தோஷமடைந்து):—இந்தா கந்தா, உனக்கு ஐந்து மிட்டாய் பரிசு. கணக்குச் சரியாய்ச் சொன்னாயல்லவா?

கந்தன்:—இப்படி தெரிந்திருந்தால் இன்னும் இரண்டு கூடச் சொல்லியிருப்பேனே.

—எம். எஸ். தாவுத்.

●

பிறந்த தினம்!

பிச்சைக்காரன்:—சாமி! ரெண்டணா இருந்தாக் கொடுங்க; குல்கந்து வாங்கிச் சாப்பிடறேன்.

பிரபு:—எதற்காகக் குல்கந்து?


பிச்சைக்காரன்:—இன்னிக்கி என் பிறந்த நாளுங்க!

—ஏ. வி. சக்கரவர்த்தி.

●

அதன் காரணம்

கணவன்:—அடியே! புது பாஷன் புடவை ஒன்று வாங்கி வந்திருக்கிறேன். இங்கே வந்து பாரேன்!



மனைவி:—இதென்ன புடவை? புலி வேஷம் போட்ட மாதிரி இருக்கிறதே!

கணவன்:—அதற்காகத்தான் உனக்கு ஏற்றதாக இருக்குமென்று வாங்கி வந்தேன்!

—வி. மீனலோசனி.

விடுதிகளில் தங்க நேர்ந்தால், மற்றவர்கள் படுக்கும் அறையில் படுக்கக் கூடாது என்று புத்த பிக்ஷு எச்சரித்தது அவனுக்கு ஞாபகம் வந்தது.

நல்ல வேளையாக, விடுதியில் படுத்துக் கொள்வதற்கு அவனுக்குத் தனி அறையே கொடுத்தார்கள். வஜ்ர பாஹுவும், "தம்பி! இனிமேல் உன் வழி வேறு; என் வழி வேறு. நான் அதிகாலையில் எழுந்து போய் விடுவேன். உன்னை எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது. எப்போதாவது உனக்கு ஏதாவது உதவி தேவையாயிருந்தால் என்னிடம் வரத் தயங்காதே" என்று சொல்லிவிட்டு விடை பெற்றுப் படுக்கச் சென்றான்.

* * *

பரஞ்சோதி படுத்துக் கொள்ளும் போது, வஜ்ரபாஹு கூறிய அநுபவம் அவனுக்கு ஞாபகம் இருந்தபடியால், அசந்து தூங்கிவிடக்கூடாது என்றும் ஏதாவது சத்தம் கேட்டால் பளிச்சென்று எழுந்துவிட வேண்டுமென்றும் மனதிற்குள் சங்கல்பம் செய்து கொண்டான். ஆனால் வாலிபப் பருவமும், நாளெல்லாம் பிரயாணம் செய்த களைப்பும் சேர்ந்து, படுத்துச் சிறிது நேரத்துக்கெல்லாம் அவனைக் காடாந்த நித்திரையில் ஆழ்த்தி விட்டன. எனினும், அவனுடைய தூக்கம் அமைதியான தூக்கமாயிருக்கவில்லை. என்னவெல்லாமோ பயங்கரமான கனவுகள் மாறி மாறித் தோன்றிக் கொண்டிருந்தன. செந்நிறப் புரசம் பூக்கள் நிறைந்த பிரதேசத்தில் ஆவி வடிவத்துக் குதிரை வீரர்களுக்கு மத்தியில் தானும் ஓர் ஆவி வடிவமாகி ஓயாது சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்ததாக அவனுக்குத் தோன்றியது. அலைந்து அலைந்து களைத்துப் போன பிறகு ஒரு மலைக் குகையில் அவன் போய்ப் படுத்துக் கொள்கிறான். கனவிற்குள், தூங்குவதாகக் கனவு காண்கிறான்! ஆனால், அந்தத் தூக்கத்திலும் நினைவு இருந்து கொண்டிருக்கிறது. கண்கள் மட்டும் மூடியிருக்கின்றன. பிசாசுகள் ஒன்று மாற்றி ஒன்று வந்து அவனுடைய இடுப்பைத் தடவுகின்றன. 'நல்ல வேளை, ஓலை இடுப்பில் இல்லை; தலைக்கு அடியில் வைத்துக் கொண்டிருக்கிறோம்' என்ற எண்ணம் தோன்றுகிறது. கண்ணைத் திறந்து பார்த்தால் அந்தப் பிசாசுகள் ஓடிவிடுமென்று அவன் எண்ணுகிறான். ஆனால் எவ்வளவு முயன்றும் கண்களைத் திறக்கவே முடியவில்லை. பிறகு, சற்று நேரம் நினைவே யில்லாமல் போகிறது. அப்புறம் எங்கேயோ வெகு தூரத்தில் ஒரு கொள்ளிவாய்ப் பிசாசு காணப்படுகிறது. அதை அழைத்துக் கொண்டு ஒரு கரும் பிசாசு அவனை நோக்கி வருகிறது. அருகே, அருகே, அருகே அவை நெருங்கி வந்து கொண்டிருக்கின்றன! கொள்ளிவாய்ப் பிசாசின் வாயிலிருந்து வரும் ஒளியினால் அவனுடைய மூடியுள்ள கண்களும் கூசுகின்றன. கடைசியில், அந்த ஒளி பொறுக்க முடியாமல் கண்களைத் திறக்கிறான்.

ஆனால், வருகிறவை கொள்ளிவாய்ப் பிசாசும் இல்லை, கரும் பிசாசும் இல்லை என்பதை அவனுடைய திறந்த கண்கள் தெரிவிக்கின்றன. அஸ்தமிக்கும் நேரத்தில் மலைப்பாதையில் அவன் சந்தித்த வஜ்ர பாஹுவும், அவனுக்குப் பின்னால் விளக்கு ஏந்திக்கொண்டு அந்த விடுதியின் தலைவனும்தான் வந்து கொண்டிருந்தார்கள்!

"ஆ!" என்று அலறிய வண்ணம் பரஞ்சோதி எழுந்து உட்கார்ந்தான். அவனுடைய கை, அருகில் தரையிலே கிடந்த வேலைப் பற்றியது.

"உண்மைதான்; ஆனால் இடுப்பில் ஓலை இருந்தால்தானே கிடைக்கும்?"

"பின் வேறு பத்திரமான இடத்தில் வைத்துக் கொண்டிருந்தீர்களா?"

"ஆமாம்; அக்கினி பகவானிடமே ஒப்படைத்து விட்டேன்."

"இதென்ன? நல்ல தூதராயிருக்கிறீர்களே? ஓலையை நெருப்பிலே போட்டு விட்டு எதற்காகப் பிரயாணம் செய்கிறீர்கள்?"

"ஓலையை நெருப்பிலே போடுவதற்கு முன்னால் அதைப் படித்து விஷயத்தை மனதில் பதியவைத்துக் கொண்டேன்."

"ஓஹோ! இராஜாங்க தூதர்கள் அப்படிக்கூடச் செய்வார்களா, என்ன?"

"சமயோசிதமாகக் காரியம் செய்யத் தெரியாதவன் இராஜாங்க தூதனாக இருக்கவே அருகனில்லை, தம்பி! இம்மாதிரி அபாயம் ஏதாவது நேரலாமென்று நான் எதிர்பார்த்தேன். எனவே, முன் ஜாக்கிரதையாகக் காரியம் செய்தேன். அதற்காகச் சக்கரவர்த்தியிடமிருந்து எனக்கு வெகுமதியும் கிடைத்தது."

இதை யெல்லாம் கேட்ட பரஞ்சோதியின் உள்ளம் பெரிதும் குழப்பத்துக்கு உள்ளாயிற்று. இரவில்



அத்தியாயம் 32

கும்பகர்ணன்

பிரயாணிகள் இருவரும் விடுதியை நெருங்கியபோது, அங்கே ஆயத்தமாய்க் காத்திருந்த வீரர்கள் நால்வர் கையில் உருவிய கத்திகளுடன் பளிச்சென்று முன்னால் வந்து, "நில்!" என்றார்கள். விடுதியின் வாசலில் நின்ற இன்னொரு வீரன் கையில் பிரகாசமான தீவர்த்தியைப் பிடித்துக் கொண்டிருந்தான். அதன் ஒளியில் மற்ற நால்வருடைய கையிலும் இருந்த கத்திகள் மின்னித் திகழ்ந்தன.

அப்போது அந்தக் குதிரை வீரன் தன் அங்கியினுள்ளிருந்து ஏதோ ஒரு அடையாளத்தை எடுத்துக் காட்டவே, அந்த வீரர்கள் நால்வரும் சிறிது மரியாதையுடன் ஒதுங்கி நின்று அவனுக்கு வழி விட்டுப் பின்னால் வந்த பரஞ்சோதியை அணுகினார்கள். அந்தக் குதிரை வீரன் திரும்பிப் பார்த்து, "அவனும் என்னுடன் வருகிறான்!" என்று சொல்லவே, பரஞ்சோதிக்கும் அவர்கள் வழி விட்டார்கள்.

விடுதியின் வாசலில் தீவர்த்தி பிடித்துக் கொண்டிருந்தவனுக்கு அருகில் நின்ற ஒரு மனிதன் அப்போது வெளியே வந்தான். இரண்டு பிரயாணிகளும் குதிரை மேலிருந்து இறங்கியதும், மூத்த பிரயாணி அவனிடமும் அந்த அடையாளத்தைக் காட்டி விட்டு, "நாங்கள் இருவரும் இன்று இரவு விடுதியில் தங்க வேண்டும். குதிரைகளுக்கும் தீனி போட வேண்டும்" என்றான்.

விடுதித் தலைவனும் வீரர்களைப் போலவே மரியாதை காட்டி, "அப்படியே, ஐயா!" என்று மறுமொழி கூறினான். இதெல்லாம் பரஞ்சோதிக்கு மிக்க வியப்பை அளித்தது. அவன் கொண்டு வந்திருந்த சிங்க முத்திரையிட்ட இலச்சினைக்கு எங்கும் அவ்வளவு மரியாதை கிடைக்கவில்லை. அதைப் பார்த்து விட்டு அவனை மேலே போக விட்டார்கள்; அவ்வளவுதான்.

ஆகவே, இந்த வீரன் காட்டிய இலச்சினை வேறு விதமாயிருக்க வேண்டுமென்றும், அவன் ஏதோ பெரிய இராஜாங்கக் காரியமாகப் போகிறான் என்றும் பரஞ்சோதி ஊகித்துக் கொண்டான். ஒருவேளை பல்லவ சைனியத்தைச் சேர்ந்த பெரிய தளபதியாகக்கூட அவன் இருக்கலாம் என்றும் சந்தேகித்தான். தான் இப்போது ஏற்றுக் கொண்டிருக்கும் காரியம் ஒரு விதமாய் முடிந்த பிறகு, இந்த வீரனை மறுபடியும் கண்டு பிடித்து இவனுடைய சிநேகத்தை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று ஆசை பரஞ்சோதியின் உள்ளத்தில் உண்டாயிற்று.

இருவரும் உணவு அருந்தியபோது, அவ்வீரன் பரஞ்சோதியைப் பார்த்து, "தம்பி! வைஜயந்தி யுத்தத்தைப் பற்றி உனக்குச் சொன்னேனல்லவா? அந்தக் காலத்தில் எனக்குக் கிட்டத்தட்ட உன் வயது இருக்கும். அப்போது ஒரு தடவை நான் இந்த விடுதியில் தங்கியிருக்கிறேன். அன்றிரவு எனக்கு ஒரு விசித்திரமான அநுபவம் ஏற்பட்டது!" என்றான்.

"அது என்ன?" என்று பரஞ்சோதி ஆவலுடன் கேட்டான்.

"தம்பி! இத்தனை நேரமும் நாம் ஒருவர் பெயரை ஒருவர் தெரிந்து கொள்ளாமலே பேசிக் கொண்டிருக்கிறோம். உன் பெயரை வேணுமானால் நீ சொல்ல வேண்டாம். என் பெயரைத் தெரிவிப்பதில் எனக்கு ஆட்சேபம் ஒன்றுமில்லை. எனக்கு என் தாய் தந்தையர் இட்ட பெயர் வஜ்ரபாஹு. ஆனால் என் சிநேகிதர்கள் என்னைச் சாதாரணமாய்க் கும்பகர்ணன் என்று அழைப்பார்கள். தூங்கினால் அப்படித் தூங்குவேன். அதுவும் உன் வயதில் அசாத்தியமாய்த் தூங்குவேன். இன்று போலவே அன்றைக்கும் நாளெல்லாம் பிரயாணம் செய்திருந்தபடியால் அசந்து தூங்கி விட்டேன். அப்போது என்ன நடந்தது, தெரியுமா?"

"ஏதாவது பிசாசு சொப்பனம் கண்டு உளறியடித்துக் கொண்டு எழுந்தீர்களாக்கும்!" என்று பரஞ்சோதி குறும்பாகக் கூறினான்.



அதைக் கேட்ட வஜ்ரபாஹு என்னும் அவ்வீரன் நகைத்து விட்டு "இல்லை, இல்லை! அதை விட அபாயமான விஷயம்! வீடு இடிந்து என்மேலே விழுந்து விட்டதுபோல் சொப்பனம் கண்டு கண்ணை விழித்துப் பார்த்தபோது, ஆறு திருடர்கள் என்மேல் உட்கார்ந்து அமுக்கிக் கொண்டிருந்ததுடன், இரண்டு பேர் என் இடுப்பைத் தடவிக் கொண்டிருந்தார்கள். என்னத்திற்காகத் தெரியுமா?"

"ஐயா! வஜ்ரபாஹு! என்னை ஞான திருஷ்டியுள்ளவன் என்று நினைத்துக் கொண்டீர்களா? தாங்கள் சொல்லா விட்டால் எனக்கு எப்படித் தெரியும்?" என்றான் பரஞ்சோதி.

"நல்லது, தம்பி! நான் சேநாதிபதி கலிப்பகையாருக்குக் கொண்டு போன ஓலையைத் தஸ்கரம் செய்வதற்காகத்தான். என் இடுப்பில் அந்த ஓலை இருக்குமென்று அந்த மூடர்கள் எண்ணினார்கள்!"

"ஆஹா!" என்றான் பரஞ்சோதி. அவனை அறியாமல் அவனுடைய வலது கை இடுப்பைத் தொட்டுப் பார்த்தது. இது ஒரு கணந்தான்; மறு கணம் கை பழைய நிலையை அடைந்தது.

ஆனால், அந்த ஒரு கண நேரச் செய்கையை வஜ்ரபாஹுவின் தீவிரமான கண்கள் கவனிக்காமல் போகவில்லை.

"அப்புறம் என்ன ஆயிற்று, ஐயா! அவர்களுக்கு ஓலை கிடைத்ததா?" என்று பரஞ்சோதி கேட்டான்.

"ஓலை கிடைக்கவில்லை. என்னுடைய கை முஷ்டியினால் தலைக்கு மொட்டு குட்டுக்கள் கிடைத்தன! பெற்றுக் கொண்டு அவர்கள் தலை தப்பியது தம்பிரான் புண்ணியமென்று ஓட்டம் பிடித்தார்கள்!"

பரஞ்சோதி சிரித்துவிட்டு, "அந்த முட்டாள்களுக்கு நன்றாய் வேண்டும்! உங்களுடைய கும்பகர்ணத் தூக்கத்தைக் கலைத்தார்கள் அல்லவா? யாராவது ஒருவன் தனியாக வந்து தூக்கத்தைக் கலைக்காமல் இடுப்பைத் தடவியிருந்தால் ஒருவேளை ஓலை கிடைத்திருக்கும்!" என்றான்.

"அப்போதும் கிடைத்திராது" என்றான் வஜ்ரபாஹு.

"ஏன்? நீங்கள் தான் கும்பகர்ணன் மாதிரி தூங்குவேன் என்று சொன்னீர்களே?"

அப்போது சமாதானம் செய்துகொண்டார். அதனுடைய விபரீத பலனை இப்போது அநுபவிக்கிறார்!

"என்ன விபரீத பலன்?"

"விபரீத பலன் என்னவென்று கேட்கிறாய்? புலிகேசியின் சைனியங்கள் இந்த யுத்தத்தில் வைஜயந்தியைக் கைப்பற்றிக் கொண்டு மேலேறி வருகின்றனவென்று உனக்குத் தெரியாதா? இன்னொரு பயங்கரமான செய்தி கேள்விப்படுகிறேன். அது மட்டும் உண்மையாயிருந்தால்......"

"இன்னும் பயங்கரமான செய்தியா? அது என்ன, ஐயா!"

"புலிகேசி சாதாரண மனிதகுலத்தவன் இல்லை, இரணியன், இராவணன் முதலிய அசுர குலத்தைச் சேர்ந்தவன் என்று தோன்றுகிறது. வைஜயந்தி பட்டணத்தைக் கைப்பற்றியவுடனே, அந்த நகரிலிருந்த செல்வங்களையெல்லாம் கொள்ளையடித்து, நகரையே கொளுத்தும்படியாகக் கட்டளையிட்டான் என்று தெரிகிறது. இதை என்னால் நம்பவே முடியவில்லை. ஒருவேளை உண்மையாயிருந்தால்......?"

"இருந்தால்......?"

"உண்மையாயிருந்தால், காஞ்சி மகேந்திர வர்ம சக்கரவர்த்திக்கு 'இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்' என்றுதான் சொல்வேன். உலகத்தில் ராஜாக்களும், சக்கரவர்த்திகளும் 'போரிலே புலி' என்றும், 'சண்டையிலே சிங்கம்' என்றும் பட்டப் பெயர் வாங்குவார்கள். காஞ்சி சக்கரவர்த்தி 'சித்திரகாரப் புலி' என்று பட்டம் பெற்றிருக்கிறார் அல்லவா? அவருக்கு இதெல்லாம் வேண்டியதுதானே?"

பரஞ்சோதி மீண்டும் மௌனத்தில் ஆழ்ந்தான். வைஜயந்தி பட்டணம் எரிக்கப்பட்ட செய்தி அவன் மனத்தைக் கலக்கியிருந்தது. "யுத்தம் என்றால் இப்படியும் உண்டா?" என்று அவன் உள்ளம் கொதித்தது.

சற்றுப் பொறுத்து அவ் வீரன், "தம்பி! நீ மிகவும் ஜாக்கிரதையுள்ள பிள்ளை. எங்கே போகிறாய், என்ன காரியமாகப் போகிறாய் என்று உன்னை நான் கேட்கவில்லை. ஆனால், இன்று ராத்திரி எங்கே தங்குவதாக உத்தேசம் என்று சொல்வதில் உனக்கு ஆட்சேபம் ஒன்றுமிராதே?" என்று கேட்டான்.

"இந்த மலையைத் தாண்டியதும் அப்பால் ஒரு மகேந்திர விடுதி இருப்பதாகச் சொன்னார்கள். அதில் தங்கலாமென்று எண்ணியிருக்கிறேன். இருட்டுவதற்கு முன்னால் மகேந்திர விடுதிக்குப் போய்ச் சேர்ந்து விடலாமென்று நினைத்தேன். அதுதான் முடியவில்லை."

"ஆ! அதோ பார் வெளிச்சத்தை! நீ சொன்ன மகேந்திர விடுதி அதுதான். நானும் இன்றிரவு அங்கேதான் தங்கப் போகிறேன்" என்றான் அவ்வீரன்.



வந்தேன் ......" என்று கூறிப் பரஞ்சோதி சட்டென்று நிறுத்தினான்.

"அப்படியா, தம்பி! நான் கூடச் சைவன்தான். மகான் நாவுக்கரசரை நீ காஞ்சியில் தரிசிக்க வில்லையா?"

"இல்லை!"

"ஏன்?"

"அதற்குள் இந்த வேலை வந்து விட்டது."

"எந்த வேலை?"

பரஞ்சோதி சற்று நிதானித்து, "ஐயா! என்னுடைய வேலையைப் பற்றி நீங்கள் ஒன்றும் கேட்கா விட்டால், நான் பொய் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது!" என்றான்.

"ஆஹா! நீ வெகு கெட்டிக்காரப் பிள்ளை!" என்றான் அவ் வீரன். பிறகு சொல்கிறான்:—"தம்பி! உன் மாதிரியே எனக்கு ஒரு புதல்வன் இருக்கிறான். உன் வயதுதான் அவனுக்கும். உன்னைப் பார்த்தால் அவனைப் பார்த்தது மாதிரியே தோன்றுகிறது எனக்கு. இந்த வேளை அவன் என்ன செய்து கொண்டிருக்கிறானோ, தெரியவில்லை. இந்தப் பிரயாணத்தில் என்னோடு தானும் வரவேண்டுமென்று பிடிவாதம் பிடித்தான். நான் கூடாது என்று தடுத்துவிட்டேன். அதனால் அவனுக்கு என் பேரில் கோபம்......"

இப்படிப்பட்ட ஒரு வீரத் தந்தையின் அன்பைப் பெற்றுள்ள அந்த அதிர்ஷ்டசாலியைக் குறித்துப் பரஞ்சோதியின் மனதில் சிறிது பொறாமை உண்டாயிற்று.

அந்தத் தகாத எண்ணத்தைப் பரஞ்சோதி மறக்க முயன்றவனாய், "ஐயா! வைஜயந்தி யுத்தத்தைப் பற்றிக் கூறி இடையில் நிறுத்தி விட்டீர்களே! அந்தப் போரில் சேனாபதி கலிப்பகை உயிர் துறந்ததாகச் சொன்னீர்கள். ஆனால், பல்லவ சைனியத்துக்கு வேறு சேனாபதி கிடைக்க வில்லையா? தோற்று ஓடிய சளுக்கர்களைத் தொடர்ந்து பல்லவ சைனியம் ஏன் போகவில்லை?" என்று கேட்டான்.

"விசித்திர சித்தர் என்று பட்டப் பெயர் பெற்ற காஞ்சி மகேந்திர வர்ம சக்கரவர்த்தியை நீ பார்த்திருக்கிறாயா, தம்பி!" என்று பொருத்தமில்லாமல் கேட்டான் அவ் வீரன்.

பரஞ்சோதி மௌனம் சாதித்தான்.

அவனுடைய மௌனத்தைப் பாராட்டி அவ் வீரன் தலையை ஆட்டிவிட்டு மேலே சொல்கிறான்:—

"விசித்திர சித்தரான மகேந்திர சக்கரவர்த்தி அந்தக் காலத்தில் — அதாவது இருபது வருஷத்துக்கு முன்பு — மிக மிக விசித்திரமான எண்ணங்களைக் கொண்டிருந்தார். உலகத்தில் யுத்தம் என்பதே நடக்கக் கூடாது, பகைமை துவேஷம் என்பதே இருக்கக்கூடாது. — எல்லா ஜனங்களும் சிற்பம், சித்திரம் முதலிய கலைகளில் ஈடுபட்டு ஆடல் பாடல்களில் ஆனந்தமாய்க் காலம் கழிக்க வேண்டும் என்ற எண்ணங்கள் அவர் மனதில் குடிகொண்டிருந்தன. நமக்கு இருக்கிற இராஜ்யம் போதுமே, அதிகம் என்னத்திற்கு என்ற வைராக்கியத்தையும் கொண்டிருந்தார். அப்பேர்ப்பட்ட சமயத்தில் புலிகேசியினிடமிருந்து சமாதானக் கோரிக்கையும் கிடைக்கவே, யுத்தத்தை உடனே நிறுத்தும்படி கட்டளை போட்டுவிட்டார்."

"புலிகேசி எப்படிச் சமாதானக் கோரிக்கை அனுப்பினான்? அவன் தான் அப்போது சிறு பிள்ளை என்றீர்களே?"

"ஓஹோ! உனக்கு அந்த நாள் சம்பவம் எல்லாம் ஒன்றுமே தெரியாது என்பதை மறந்து விட்டேன். கேள்: சித்தப்பன் மங்களேசன், ராஜ்யத்தின் மேலுள்ள ஆசையினால், புலிகேசியையும் அவன் தம்பிகளையும் சிறையில் போட்டிருந்தான். மங்களேசன் வைஜயந்தியின்மேல் படையெடுத்த போது புலிகேசியும் அவன் தம்பிமார்களும் சிறையிலிருந்து தப்பித்து வெளியே வந்துவிட்டார்கள். தோல்வியடைந்து திரும்பிய மங்களேசனைக் கொன்றுவிட்டுப் புலிகேசி வாதாபி மன்னனாக முடிசூட்டிக் கொண்டான். உடனே காஞ்சி சக்கரவர்த்திக்குச் சமாதானத் தூது அனுப்பினான். நாக சர்ப்பத்துடன் சமாதானம் செய்து கொண்டதுபோல் அந்தப் பாதகனுடன் மகேந்திர சக்கரவர்த்தியும்

களின் ஓரமாய் அவர்களுடைய இராஜ்யமும் விசாலித்துக் கொண்டு வந்தது. கொஞ்ச காலத்துக்குப் பிறகு வைஜயந்தி பட்டணத்தில் அவர்களுடைய தலைநகரை ஸ்தாபித்துக் கொண்டார்கள். அவர்களுக்கு ஆபத்து நேர்ந்த சமயங்களில் பல்லவ மன்னவர்களும் அவர்களுக்கு வேண்டிய உதவி புரிந்து வந்தார்கள். இருபது வருஷத்துக்கு முந்தி புலிகேசியின் மாமன் கதம்ப ராஜ்யத்தின் மீது படையெடுத்த செய்தி உனக்குத் தெரியுமோ இல்லையோ?"

"தெரியாதே? அது என்ன விஷயம்?" என்று பரஞ்சோதி ஆவலுடன் கேட்டான்.

"ஆமாம்; நீ சிறு பிள்ளை. உனக்கு எப்படி அது தெரிந்திருக்கும்? இப்போது ராட்சஸ ஸ்வரூபம் கொண்டு பல்லவ சாம்ராஜ்யத்தின் மீது படையெடுத்து வருகிறானே, இந்தப் புலிகேசியும் இவனுடைய தம்பிமார்களும் சிறு பிள்ளைகளாயிருந்தபோது, இவர்களுடைய சித்தப்பன் மங்களேசன் என்பவன் வாதாபி ராஜ்யத்தை ஆண்டு வந்தான். அவனுக்குத் திடீரென்று அயல் ராஜ்யங்களைக் கைப்பற்றிப் பெரிய சக்கரவர்த்தி ஆகிவிட வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. வடக்கேயுள்ள சில சிறுகாடுகளைக் கைப்பற்றிய பிறகு, துங்கபத்ரையைக் கடந்து கதம்ப ராஜ்யத்துக்குள் பிரவேசித்தான். பிரவேசித்து, அதிவேகமாக வைஜயந்தி நகரம் வரையில் வந்து அந்த நகரத்தை முற்றுகை போட்டு விட்டான். அப்போது, வடக்கு மண்டலத்துப் பல்லவ சைன்யந்தான் கதம்ப ராஜாவின் ஒத்தாசைக்குச் சென்றது. வைஜயந்தி பட்டணத்துக்கு அருகாமையில் பெரிய யுத்தம் நடந்தது......"

"முடிவு என்ன ஆயிற்று?"

"கேட்பானேன்? நமது வீர பல்லவ சைன்யந்தான் ஜயித்தது. சளுக்கர்கள் தோற்றுப் பின்வாங்கி ஓடினார்கள். ஆஹா! அப்போது மட்டும் அந்தச் சளுக்கர் படையைப் பின் தொடர்ந்து போய் நிர்மூலம் செய்திருந்தால், இப்போது இந்த யுத்தமே வந்திருக்காது. என்ன பிசகு? எப்பேர்ப்பட்ட பிசகு!" என்றான் அவ் வீரன்.

அந்தப் பழைய வரலாறுகளையெல்லாம் அறிந்து கொள்வதில் பரஞ்சோதிக்கு ரொம்பவும் சுவாரஸ்யமிருந்தது. முக்கியமாக, யுத்தங்களைப் பற்றியும் அவை நடந்த முறைகளைப் பற்றியும் வெற்றி தோல்விகளைப் பற்றியும் தெரிந்துகொள்ள அவனுக்கு மிகவும் ஆவலாயிருந்தது. அதோடு, நிலா இல்லாத முன்னிரவில் வழிப் பிரயாணத்தின் அலுப்புத் தெரியாமலிருப்பதற்கும் ஏதுவாயிற்று.

"தோல்வியடைந்து ஓடிய சளுக்க சைன்யத்தைப் பல்லவ சைன்யம் ஏன் தொடர்ந்து போகவில்லை?" என்று அவன் கேட்டான்.

"அதற்குப் பல காரணங்கள் உண்டு. முக்கியமான காரணம் என்னவென்றால், வைஜயந்தி பட்டணத்துக்கருகில் நடந்த யுத்தத்தில் பல்லவ சைன்யம் ஒரு பெரிய நஷ்டத்தை அடைந்தது. பல்லவ சேனாதிபதி அந்தப் போரில் உயிர் துறந்தார்!"

பரஞ்சோதியின் நினைவு சட்டென்று வேறு பக்கம் திரும்பியது.

"ஐயா! போர்க்களத்தில் உயிர் துறந்த அந்த வீர பல்லவ சேனாபதியின் பெயர் என்ன?" என்று அவன் கேட்டான்.

"நீ கேள்விப்பட்டதில்லையா? மகா வீர சிகாமணியான சேனாபதி கலிப்பகைதான் அவர். இப்போதுள்ள கலிப்பகையாரின் மாமன்......"

"கேள்விப்பட்டிருக்கிறேன், ஐயா! கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த வீர புருஷரை மணம் செய்து கொள்வதாக இருந்த திலகவதியாரைப் பற்றியும் அவருடைய சிவ பக்தி மகிமையைப் பற்றியும் கேட்டிருக்கிறேன்" என்று பரஞ்சோதி பக்தி பரவசத்துடன் கூறினான்.

"உனக்கு எல்லாம் தெரிந்திருக்கிறதே! நீ பெரிய வீர சைவன் போலிருக்கிறதே!" என்றான் அவ் வீரன்.

"ஆம், ஐயா! என் உற்றார், உறவினர் எல்லாரும் சைவர்கள். நாவுக்கரசு அடிகளைத் தரிசிப்பதற்கென்றே நான் கிளம்பிக் காஞ்சிக்கு



அத்தியாயம் 31

வைஜயந்தி

வழித் துணையாகக் கிடைத்த இந்த வீரன் எந்த மயூர சன்மனைப் பற்றிக் கூறி வந்தானோ அதே மயூர சன்மனைக் குறித்து ஏற்கெனவே புத்த பிக்ஷு கூறியிருந்தது பரஞ்சோதியின் ஞாபகத்தில் இருந்தது. ஆனால் அவர் கூறிய வரலாறு இவ்வளவு ரஸமாக இல்லை. அந்த வரலாற்றை அவர் கூறியதின் நோக்கமும் பரஞ்சோதிக்குப் பிடிக்கவில்லை. "அந்த மயூர சன்மனைப் போல் ஒரு வேளை நீயும் ஆனாலும் ஆகலாம்!" என்று புத்த பிக்ஷு வேடிக்கையாகக் கூறினாரோ, வினையாகக் கூறினாரோ, அது பரஞ்சோதியின் உள்ளத்தில் அருவருப்பைத்தான் உண்டு பண்ணிற்று. ஏன்? மயூர சன்மன் பேரிலேயே அவனுக்கு அருவருப்பு உண்டாக அது காரணமாயிருந்தது.

ஆனால், இப்போது மயூரசன்மன் செய்த வீரப்போரையும், உடம்பில் முப்பத்தாறு காயங்களுடன் அவன் பல்லவ மன்னனின் முன்பு கொண்டு வந்து நிறுத்தப்பட்டதையும் அறிந்ததும், மயூரசன்மன் மீது பரஞ்சோதியின் அநுதாபமும் மரியாதையும் பன்மடங்கு வளர்ந்தன.

"அப்பேர்ப்பட்ட வீரன் பல்லவ மன்னனுக்குச் சரணாகதி அடைய மறுத்துத் தானிருப்பான். அரசனுக்கு எதிராகக் கலகம் செய்பவர்களைப் பூமியில் புதைத்து யானையின் காலால் இடறச் செய்வதுதானே வழக்கம்! பல்லவ ராஜாவும் அப்படிச் செய்து விட்டாராக்கும்!" என்று பரஞ்சோதி மனக் கசப்புடன் கூறினான்.

"இல்லை, தம்பி, இல்லை! சாதாரணமாய் அங்க, வங்க, கலிங்க, காஷ்மீர காம்போஜ தேசங்களின் ராஜாக்களாயிருந்தால் அப்படித்தான் செய்திருப்பார்கள். ஆனால் காஞ்சி பல்லவ ராஜாக்களின் காரியங்கள் ஒரு தனிப் போக்காயிருக்கும்......"

"பல்லவ ராஜா என்ன செய்தார்?"

"மயூர சன்மனை மன்னித்ததோடு, அவனுடைய வீரத்தை மெச்சி அவன் ஸ்தாபித்த ராஜ்யத்தை அவனுக்கே திருப்பிக் கொடுத்துவிட்டார். மயூர சன்மனுடன் தானே சென்று அவனுக்கு முடி சூட்டிவிட்டு வந்தார்!"

"ஆஹா!" என்று பரஞ்சோதி தன் உண்மையான வியப்பைத் தெரிவித்து விட்டு, "அதைக் குறித்து மயூர சன்மன் நன்றி பாராட்டினானா?" என்று கேட்டான்.

"மயூர சன்மன் மட்டுமில்லை. அவன் ஸ்தாபித்த கதம்ப வம்சத்தில் பிறந்தவர்கள் எல்லாரும் சென்ற இருநூறு வருஷத்துக்கு மேலாகப் பல்லவர்களுக்குக் கப்பம் செலுத்திக் கொண்டு நன்றியுடன் இருந்து வந்தார்கள். கிருஷ்ணா - துங்கபத்திரை நதிக் கரை

பெரியவாள் கதை — 15

தலைவர் விடுதலை

— ஸ்ரீ சுத்தானந்த பாரதி —

தமிழகத்தை ஆண்ட சிறந்த மன்னருள் திருமாவளவன் ஒருவன். அவன் அசோகன், அக்பர், அகுஸ்தஸ், ஸீஸர், சிக்கந்தர் வரிசையில் வைத்து மதிக்கத் தக்கவன். இவன் இளமையில் தந்தையை இழந்தான். இவனையும் இடர்கள் சூழ்ந்தன.

உறையூரில் உட்கலகம். "ஒற்றுமை ஒற்றுமை" என்று கதறினன் இளங் கரிகாலன்.* "அப்படியா செய்தி? எங்களை ஒன்றாக்கினால் உன்னைத் துண்டாக்குவோம்" என்று கலகப் புலிகள் அவன் கழுத்தில் கத்தி வைக்க அரண்மனையிற் புகுந்தனர். ஆள் எங்கே? மாறு வேடம் பூண்டு தமிழ் நாடெங்கும் சுற்றிக் கருவூரில் ஒளிந்தான். அங்கிருந்து காலநிலைக் கேற்றபடியே திருமாவளவன் தன் வளத்தையும் சேனை பலத்தையும் பெருக்கச் சமயம் பார்த்திருந்தான். மாமன் இரும்பிடர்த்தலையார் அறிவாளி; பல சாலி. சிறந்த ராஜதந்திரி. அவன் ஜனங்களிடையே அரசன் வேண்டும் என்ற ஆவலை எழுப்பினான். ஜன சம்மதப்படி ஒரு யானை ஏவப்பெற்றது; அது கருவூர் சென்று திருமாவளவன் கழுத்தில் மாலையிட்டு அவனை முதுகில் ஏற்றிக் கொணர்ந்தது. எல்லாம் மாமன் வேலை. தக்க சமயத்தில் அவர் மைத்துனனுக்கு வந்து முடி சூட்டினார். கலகக்காரர் முடியைத் தட்டி விட்டு, கரிகாலனைச் சிறை யிட்டனர். "சீச, அது போதாது!" என்று சில மகானுபாவர்கள் சிறைக்கே தீ வைத்தனர். மறு நாள் "கரிகாலன் இறந்து சாம்பலானான்" என்று பகைவர் பறை சாற்றினர். பகைத் தலைவன் தனிக் காட்டு ராஜாவாகப் பார்த்தான். மறுபடியும் கட்சிகள், எதிர்க் கட்சிகள். எழுந்து "பழைய அரசனே வேண்டும்" என்று கூப்பாடு போட்டன. "பாவிகளா, அருமையான அரசனைச் சிறையிட்டுத் தீ வைத்துக் கொன்றீர்களே!" என்று மாமன் கண்டித்தான். பகைவர் கூடத் தம் செயலை நினைந்து வருந்தினர்.

அச்சமயம் ஒரு வீரன், "ஒற்றுமையாயிருங்கள்; ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்தாவது அமைதியாயிருங்கள். நாம் உட்கலகம் செய்தால் நாட்டை இன்னொருவன் கௌவிக் கொண்டு போவான்" என்று கம்பீரமாகப் பேசினான். "அடாடா! பழைய அரசர் இப்படித்தானே சொன்னார்? அவர் இருந்தால் ...." என்று சிலர் தொடக்கக் கொட்டினர். வீரன் முக மூடியை எடுத்தான். "ஆ! திருமாவளவனா? நல்வரவு!" என்றனர் அன்பர். "ஹா! நீ சாம்பலாகவில்லையா?" என்று பகைவர் மீண்டும் கலகம் செய்தனர். கரிகாலன் சரியான சேனை பலங் கொண்டு கலகத்தை அடக்கினான்.

பகைவர் தலைகள் ஆடிப் புலிபோல் உதிர்ந்தன. கரிகாலன் வீரச் செருக்குடன் அரியணை ஏறி, [illegible] நிலையை காட்டினான்.

வெஞ்சிறையில் வாடாது, வீரத் தலைவர்களை
அஞ்சாது விடுவித்தால் அக்கணமே—வஞ்சப்
பகைநீங்கி நாடொன்று பட்டுமுன் னேற
வகையாகும் வெற்றி வரும்.

* கரிகாலன்: யானைப் படையையும் காலன்போலப் பொருதும் பலசாலி. கரி + காலன்.



அவசியமில்லை!

கோபு:—"அம்மா! இன்று பிலிம்ஸ் பார்க்குக்குப்போய், குரங்கு, கரடி எல்லாம் பார்த்து விட்டு வரட்டுமா?"

அம்மா:—"போடா அசடு! கல்கத்தாவிலிருந்து அத்தையும் தாத்தாவும் இங்கே வந்திருக்கும் போது, பிலிம்ஸ் பார்க்குக்கும் போவானேன்?"

—என். என். வி.

மேலும் புலம்புகிறான்: இந்தக் கொடுமைக் கெல்லாம் காரணமாக இருந்தவர்கள் குலத்தோடு அப்படியே அழிந்து போயிருக்க வேண்டுமே! ஆனால், அதைப் பற்றி நான் எப்படிச் சொல்ல! ஒழியவில்லையே நான்!

கொடியவர் யாவரும்
 குலங்கள் வேர் அற
நொடிகிலர்! யான் அது
 நுவல்வ(து) எங்ஙனம்! —
கடியவள் வயிற்றினில்
 பிறந்த கள்வனேன்
முடிகிலென், அருந்துயர்
 முடிய' — என்னுமால்.

[நொடிகிலர்: இறந்து ஒழியவில்லை; முடிகிலென்: நானும் இறந்து ஒழியவில்லை; அருந்துயர் முடிய: எல்லாருக்குமே ஏற்பட்ட தாங்க முடியாத துயரம் தீரும்படி.]

சூரியனைப் போல் விளக்கம் பெற்று வந்த குலத்துக்கு என்றுமில்லாத பெரும் பழி வந்து விட்டதே!

'இரதம்ஒன்(று) ஊர்ந்துபார்
 இருளை நீக்கும் அவ்
வரதனில் ஒளிபெற
 வளர்ந்த தொல்குலம், —
பரதன்என்(று) ஒருபழி
 படைத்த(து)' என்னுமால்,
மரகத மலையென
 வளர்ந்த தோளினன்.

[இரதம் ஒன்று ஊர்ந்து பார் இருளை நீக்கும் அவ் வரதனில்: இரதத்தில் ஏறிச்சென்று பரந்த உலகெங்கும் போய் இருளை நீக்கும் அந்தச் சூரியனைப் போல: ஒளி பெற வளர்ந்த தொல்குலம்: மிக்க புகழோடு வளர்ந்த தொல்குலம்.]

"துயரத்தைப் பற்றிப் பேச வேண்டாம் — போர் வீரனின் கண்ணீரைப் பார்க்கிற வரையில்" என்றார் ஒரு ஆசிரியர். கம்பரும் பரதனது வீரத்தை வைத்தே அளக்கிறார் துயரத்தை. புலம்புகிறான். யார்?

மரகத மலையென
 வளர்ந்த தோளினன்!



கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

65. வீரன் அல்லவா புலம்புகிறான்!

பரதனிடம் தந்தை இறந்தான் என்று விசனம் சிறிதும் இல்லாமல் கைகேசி முதலில் சொன்னாள். அடுத்தாற்போல் எக்களிப்போடு சொன்னாள் — ராமனைக் காட்டுக்குத் தானே அனுப்பிவிட்டதாக. இதிலிருந்து தர்மம் சத்தியம் எல்லாம் உலகத்தை விட்டு அடியோடு தொலைந்து போய்விட்டதாகப் படுகிறது பரதனுக்கு. சிறிது நேரம் கழித்து அவனுடைய அடிப்படையான மனப்பாங்கு மேலிடுகிறது — தர்மம் அழியாத வஸ்து என்பதாக.

தன்னைத் தாக்குகிற துயரத்தை எப்படி நீக்குவது என்பது தெரியவில்லை அவனுக்கு. இந்தக் கைகேசியின் பக்கத்திலேயே நிற்கக் கூடாது, கோசலா தேவியின் காலில் விழுந்துதான் தீர்க்க வேண்டும் இந்தத் துயரத்தை என்று சொல்லிக்கொண்டு அப்படியே கோசலையின் அருகே போகிறான்.

ஆண்தகை கோசலை
அருகர் எய்தினான்:
நீண்டுமண் கிழிதர
விழுந்து, கேழ்கிளர்
காண்தரு தடக்கையிற்
கமலச் சீறடி
பூண்டனன் கிடந்தனன்,
புலம்பி னான்அரோ!

[ஆண்தகை: வீரனான பரதன்: நீண்டு மண் கிழிதர விழுந்து: தரை வெடித்துக் கிழியும் படியாக விழுந்து: கேழ்கிளர் காண் தரு தடக்கையில்: சிவந்த அழகிய பெரிய கைகளால்; கமலச் சீறடி பூண்டனன் கிடந்தனன்: கோசலையின் கமலம் போன்ற சின்னஞ் சிறு பாதங்களைப் பற்றிக் கிடந்தவனாய்: புலம்பினான் அரோ: அடாடா, எப்படிப் புலம்பினான்!]

புலம்புகிறதைப் பாருங்கள்!

'எந்தைஎவ் வுலகுளான்
எம்முன் யாண்டையான்?
வந்தது தமியன், இம்
மறுக்கம் காணவோ?
சிந்தையின் உறுதுயர்
தீர்திரால்' எனும்.
அந்தரத்(து) அமரரும்
அழுது சோரவே.

[எந்தை எவ்வுலகு உளான்? எம்முன் யாண்டையான்? — இந்தக் கேள்விகள் துயரத்தால் மனம் வெடித்துப் போகும் நிலையில் வருவன: எம்முன்: தமையன்: வந்தது தமியன் இம் மறுக்கம் காணவோ: நான் தனியாகப் போய்விட்டேனே! எடுத்துக் கட்டி வந்ததெல்லாம் இந்தத் துன்பத்தைப் பார்க்கத்தானா? சிந்தையின் உறு துயர் தீர்திரால்: மனசைப் புண்படுத்துகிற இந்தத் துயரைத் தீர்க்க மாட்டீரா? எனும்: என்று புலம்புகிறான் பரதன்.]

இதைப் பார்க்க யாருக்குத்தான் சகிக்கும்? வானுலகத்திலுள்ள தேவர்களுமே அழுது சோர்கிற மாதிரி தோன்றுகிறது பக்கத்தில் நின்று பார்ப்பவர்களுக்கு.

ஐயோ, தந்தையினுடைய பாதங்களைக் கண்டு தொழுக் கொடுத்து வைக்கவில்லையே! — இப்படிச் சொல்லிவிட்டுக் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தான். பிறகு வேறொரு உணர்ச்சி மேலிடுகிறது — துயரத்தின் வேகத்திலே.

'அடித்தலம் கண்டிலன்
யான்என் ஐயனைப்,
படித்தலம் காவலன்
பெயரற் பாலனோ?
பிடித்திலிர் போதும்நீர்,
பிழைத்தி ரால்'எனும்,
பொடித்தலம் தோளுறப்
புரண்டு சோர்கின்றான்.

[படித்தலம் காவலன் பெயரற் பாலனோ: சக்கரவர்த்தி என்பவன் ராஜ்யத்தை விட்டு விட்டு எப்படிப் போகலாம்? பிடித்திலிர் போதும் நீர், பிழைத்திரால்: போகாதபடி பிடித்துக்கொள்ளவில்லையே நீங்கள்? தவறு செய்துவிட்டீர்கள்: பொடித்தலம் தோளுற: நிலத்திலுள்ள தூசி தோள்களில் படியும்படியாக — புரண்டு சோர்கின்றான்.]

சொல்லித் தண்ணீரில் போட்டார். அது பந்தைத் தேடிச் சென்று அதில் பற்றிக் கொண்டது. பிறகு வேறு குச்சிகளையும் ஒன்றன் பின் ஒன்றாக அவ்வாறே தண்ணீரில் போட, ஒன்றுடன் ஒன்று சேர்ந்து நீண்டு நின்றன. மேல் குச்சியைப் பிடித்துப் பந்தை எடுத்துக் கொடுத்தார் துரோணர்.

மிக்க ஆச்சரியமும் மகிழ்ச்சியும் கொண்ட ராஜகுமாரர்கள் மோதிரத்தையும் எடுக்கச் சொன்னார்கள். துரோணர் ஒரு அம்பை எடுத்து, வில்லில் தொடுத்துக் கிணற்றில் எய்தார். அது மோதிரத்தைக் குத்தி மேலே கிளம்ப, பிராமணர் மோதிரத்தை எடுத்துக் கொடுத்தார்.

இந்தச் செயலைப் பார்த்து வியந்து, "பிராமணரே! நமஸ்காரம். நீர் யார்? உமக்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று ராஜகுமாரர்கள் அவரை வணங்கினார்கள்.

"ராஜகுமாரர்களே! நீங்கள் பீஷ்மரிடம் சென்று நான் யார் என்று தெரிந்து கொள்ளுங்கள்" என்று சொல்லி அனுப்பினார் துரோணர்.

ராஜகுமாரர்கள் சொன்ன குறிகளினின்று பீஷ்மர், அவர் புகழ் பெற்ற துரோணர் என்று தெரிந்து கொண்டு அவரே பாண்டவ கௌரவர்களுக்கு இனிக் கொடுக்கவேண்டிய பயிற்சியைத் தரக்கூடிய ஆசாரியர் என்று நிர்மாணித்து, துரோணரை விசேஷ மரியாதையுடன் அழைத்து ராஜகுமாரர்களை அவரிடம் ஆயுதப் பயிற்சியைப் பூர்த்தி செய்து கொள்ள அமைத்தார்.

துரோணர் கௌரவ பாண்டவர்களுக்கு ஆயுதப் பயிற்சி தந்து முடிந்ததும் குரு தட்சிணையாகத் துருபதனை உயிரோடு பிடித்து வரவேண்டும் என்று கர்ணனையும் துரியோதனனையும் அனுப்பினார். ஆனால் அது அவர்களால் முடியவில்லை. அதன் பின் அருச்சுனனுக்குக் கட்டளையிட்டார். அவன் போய் யுத்தம் செய்து துருபதனை மந்திரியுடன் பிடித்து வந்து துரோணரிடம் சமர்ப்பித்தான்.

துரோணர் புன்னகையுடன் துருபதனைப் பார்த்துச் சொன்னார்: "வீரனே! உன் உயிருக்கு அபாயம் வந்தது என்று பயப்படாதே. பால்யத்தில் என்னோடு விளையாடிச் சிநேக விருத்தி செய்து விட்டுப் பிறகு என்னை மோசமும் அவமானமும் செய்தாய். ராஜாவுடன் சிநேகம் செய்ய வேண்டுமானால் ராஜாவாக இருக்க வேண்டும் என்றாய். அதற்காக இந்த யுத்தம் உன்மேல் நான் செய்ய வேண்டியதாயிற்று. ஆனால் நான் மறுபடியும் உன்னுடன் சிநேகத்தையே விரும்புகிறேன். பாதி இராஜ்யத்தை உனக்கே கொடுக்கிறேன். என்னுடன் நீ சிநேகிதனாக இருப்பதற்கு உனக்கும் ஓரளவு இராஜ்யம் வேண்டுமல்லவா? ஆகையால் கொடுக்கிறேன், வைத்துக்கொள்" என்று துருபதன் முன் சொன்ன சொல்லை இவ்வாறு ஞாபகப் படுத்தினார். துருபதன் வெட்கம் மேலிட்டுத் தலைவணங்கி நின்றான். துரோணரும் அவனுக்கு எல்லா மரியாதைகளும் செய்து திருப்பி அனுப்பினார்.

* * *

துருபதனுடைய கர்வம் இவ்வாறு அடங்கினாலும் ஆத்திரம் நீங்கவில்லை. துரோணரைக் கொல்லக்கூடிய ஒரு மகனும், அருச்சுனனை மணம் புரியக் கூடிய ஒரு மகளும் தனக்கு உண்டாக வேண்டும் என்று அநேக விரதங்களிருந்து அவ்வாறே திருஷ்டத்யும்னனையும் திரௌபதியையும் பெற்றான். திருஷ்டத்யும்னனே பின்னால் பாரத யுத்தத்தில் எவராலும் எதிர்க்க முடியாத துரோணரை எதிர்த்துக் கொன்றான்.



ஒரு வேண்டுகோள்

சமீபத்தில் காலமான பிரசித்த சிறுகதை-ஆசிரியர் கு. ப. ராஜகோபாலன் தமது வாழ்வில் பணம் ஏதும் சேர்த்து வைக்கவில்லை. அவருடைய மனைவியும் சகோதரியும் மூன்று குழந்தைகளும் இன்று அநாதரவான நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுடைய உதவிக்காக ஒரு நிதி வசூலிக்க வேண்டுமென்று தமிழன்பர்கள் சிலர் முயற்சி எடுத்திருப்பது போற்றத் தக்கதாகும். கு. ப. ரா.வின் கதைகளை ஆர்வத்துடன் படித்து மகிழ்ந்த இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள அன்பர்கள் மேற்படி நிதிக்குத் தாராளமாகக் கொடுத்து உதவ வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம். பணம் பின் வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்:—

ஸ்ரீ என். ராமரத்னம், எம். ஏ. பி. எல்.,
மானேஜர், "கலைமகள்", சென்னை.

வியாசர் விருந்து

— சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் —

துரோணர்

பரத்வாஜருடைய புத்திரரான துரோணர் வேத வேதாங்கங்கள் பூரணமாக ஓதிய பிறகு, அஸ்திரப் பயிற்சியும் பெற்றார். பரத்வாஜருக்குச் சிநேகிதனான பாஞ்சால தேசத்து அரசனுடைய குமாரன் துருபதனும் முனிவருடைய ஆசிரமத்தில் துரோணருடன் படித்துக் கொண்டிருந்தான். துரோணருக்கும் துருபதனுக்கும் நெருங்கிய சிநேகிதம் உண்டாயிற்று. துருபதன் தான் பட்டத்துக்கு வரும்போது துரோணருக்குப் பாதி இராஜ்யம் கொடுப்பதாகக்கூடச் சொன்னதுண்டு.

ஆசிரம வாசம் முடிந்ததும் துரோணர் கிருபருடைய சகோதரியை விவாகம் செய்து கொண்டு அசுவத்தாமன் என்கிற குமாரனையும் பெற்றார். துரோணருக்கு மனைவியிடத்திலும் புத்திரனிடத்திலும் மிகுந்த பற்று. எப்படியாவது தனம் சம்பாதிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார். பரசுராமர் தம் பொருளை யெல்லாம் பிராமணர்களுக்குக் கொடுத்து விடப் போவதாகக் கேள்விப்பட்டு அவரிடம் போனார். துரோணர் போய்ச் சேருவதற்கு முன் பரசுராமர் தானங்கள் செய்து விட்டு வனம் போகும் தறுவாயி லிருந்தார்.

துரோணர் கேட்டதற்கு, "பிராமண சிரேஷ்டனே! உனக்கு நல்வரவு. எனக்கிருந்த பொருளனைத்தும் நான் கொடுத்தாய்விட்டது. இப்போது இந்தச் சரீரமும், என் அஸ்திர சஸ்திரங்களுந்தான மிச்சமாயுள்ளன" என்றார்.

துரோணர், "முனிவரே! அஸ்திரங்களையாவது எனக்குப் பூரணமாக உபதேசிக்க வேண்டும்" என்று பரசுராமரைக் கேட்டு, அவ்வாறே பெற்றுக் கொண்டு திரும்பினார்.

பிறகு பாஞ்சால தேசத்து ராஜா இறந்துபோய், துருபதனுக்குப் பட்டாபிஷேகமாயிற்று. இதை அறிந்து துருபதன் பாதி இராஜ்யத்தைக் கொடுப்பதாகச் சொல்லி யிருந்தானே, பெருஞ் செல்வமாவது துருபதனிட மிருந்து அடையலாம் என்று துரோணர் பாஞ்சால தேசம் சென்றார்.

அவனிடம் தன்னைப் பழைய சிநேகிதன் என்று அறிவித்துக் கொண்டார். துருபத ராஜனுக்குத் துரோணர் வந்தது பிடிக்கவில்லை. அவர் அறிமுகம் செய்து கொண்ட முறையும் பிடிக்கவில்லை. ஐசுவரிய கர்வம் நிரம்பினவனான அவன் கோபங் கொண்டு, "பிராமணரே! உம்முடைய நடத்தை உமக்குத் தகுந்ததல்ல. சிநேகிதன் என்று என்னை எவ்வாறு நீர் துணிந்து பேசுவீர்? சிம்மாசனத்தி லிருக்கும் அரசனுக்கும், அதிர்ஷ்டமும் செல்வமும் இல்லாத ஒரு சாதாரண மனிதனுக்கும் எவ்வாறு சிநேகம் என்று சொல்லிக் கொள்ளக் கூடும்? மந்த புத்தி உள்ளவரே, ஒரு காரணத்தைப் பற்றி உண்டான பால்ய பழக்கத்தை நீர் ஆதாரமாக வைத்துக் கொண்டு சிநேகம் பாராட்டுகிறீர். தரித்திரன் தனவானுக்கும், மூர்க்கன் வித்துவானுக்கும், பயந்தவன் சூரனுக்கும் எப்படி நண்பனாவான்? ஐசுவரியம் சமமாக இருந்தால்தான் சிநேகிதம். இராஜ்ய மில்லாதவன் ராஜாவுக்கு சிநேகிதன் ஆகமாட்டான்" என்று இவ்வாறு பொறுக்க முடியாத மொழிகளைச் சொல்லித் துரோணரை இகழ்ந்தான்.

துரோணர் கோபமும் வெட்கமும் மேலிட்டு ஒரு பேச்சும் பேசாமல், உள்ளத்தில் ஒரு நிச்சயம் செய்து கொண்டு ஹஸ்தினபுரம் சென்றார். ஹஸ்தினபுரத்தில் தம் மைத்துனர் கிருபர் வீட்டில் யாருக்கும் தெரிவிக்காமல் மறைவாக இருந்தார்.

ஒரு நாள் ராஜகுமாரர்கள் நகரத்துக்கு வெளியே பந்து விளையாடிக் கொண்டு திரிந்தார்கள். அப்போது பந்தும் யுதிஷ்டிரனுடைய மோதிரமும் அங்கிருந்த ஒரு கிணற்றில் விழுந்து விட்டன. எல்லாரும் கிணற்றைச் சுற்றிக்கொண்டு தண்ணீரில் மோதிரம் பளிச்சென்று தெரிவதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் கறுத்த ஒரு பிராமணர் அவ்விடம் வந்து நின்றார்.

"ராஜகுமாரர்களே! நீங்கள் பரத வம்சத்தில் பிறந்த க்ஷத்திரியர்கள். பந்தை ஏன் எடுக்க முடியவில்லை? நான் அஸ்திரத்தைக் கொண்டு எடுத்தால் எனக்கு என்ன தருவீர்கள்?" என்று பிராமணர் கேட்டார்.

"பிராமணரே! பந்தை நீர் எடுத்தால், கிருபர் வீட்டில் போஜனத்தை அடைவீர்" என்று யுதிஷ்டிரர் சிரித்துக் கொண்டு சொன்னதும், துரோணராகிய அந்தப் பிராமணர் ஒரு குச்சியை எடுத்து அஸ்திரத்துக்கு வேண்டிய மந்திரம்

ஆகாகான் அரண்மனையில்!

"சாவி"

காட்சி 1.

இடம் :—ஆகாகான் அரண்மனை.

காலம் :—இரவு பன்னிரண்டு மணி.

[சிறைக் காவலாளர்கள் அரண்மனை வாசலில் உஷாராகப் பாரா கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மலேரியா சுரம் சூக்ஷ்ம சரீரத்தில் பாராக்காரர்கள் கண்ணுக்குத் தெரியாமல் உள்ளே நுழைகிறது. காந்திஜி அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறார்.]

ஆகாகான் அரண்மனை (மலேரியா சுரம் இருட்டுத்தனமாய் காந்திஜியை அணுகுவதைக் கண்டு) :—நில்! அவரிடம் போகாதே! அவர் தூக்கத்தைக் கெடுக்காதே! யார் நீ?

மலேரியா சுரம் :— நான்தான் மலேரியா சுரம்.

அரண்மனை :—உனக்கு இங்கு என்ன வேலை? காவலாளர்கள் உன்னை எப்படி உள்ளே விட்டார்கள்? இந்த அரண்மனைக்குள் வர உன்னிடம் இந்திய சர்க்காரின் அனுமதிச் சீட்டு இருக்கிறதா?

மலேரியா (கடகட வென்று சிரித்து விட்டு):—அனுமதிச் சீட்டா? எனக்கா? பேஷ்! பேஷ்!! நான் எங்கு வேண்டுமானாலும் போவேன். சீட்டோ, ரயில் டிக்கெட்டோ, ஒன்றுமே எனக்குத் தேவையில்லை.

அரண்மனை :—சரிதான்; நீ எங்கு வேண்டுமானாலும் போ; இங்கு மட்டும் வராதே. உனக்கு அனந்தகோடி புண்ணியம் உண்டு. ஏற்கெனவே நான் நிலைகுலைந்து கிடக்கிறேன், மகாத்மா இங்கே யிருந்து நல்லபடியாய் விடுதலை அடைய வேண்டுமே என்று.

மலேரியா :— அதற்காகவேதான் நான் வந்திருக்கிறேன். இன்னும் பத்து தினங்களில் பார்!

அரண்மனை :—ஐயோ! இன்னும் பத்து தினங்கள் காந்திஜியை நீ ஹிம்சைப்படுத்தப் போகிறாயா?

மலேரியா :—நீங்களெல்லாம் பிரம்மப் பிரயத்தனம் செய்து பார்த்தீர்களே, காந்திஜியை விடுதலை செய்தார்களா? மகாகனம் சீனிவாச சாஸ்திரியார் குட்டிக் கரணம் போட்டுப் பார்த்தாரே, விடுதலை செய்தார்களா? இலங்கை முதல் லண்டன் வரை மகாத்மாஜியை விடுதலை செய்ய வேண்டுமென்று கரடியாய்க் கத்தினார்களே, விடுதலை செய்தார்களா?

அரண்மனை :—இல்லை, அதற்காக?....

மலேரியா :—அதற்காகத்தான் நான் விஜயம் செய்திருக்கிறேன். யாருக்குமே பயப்படாத அதிகார வர்க்கம் என்னைக் கண்டால் பயப்படுகிறதா இல்லையா, பார்!

அரண்மனை :—என்னமோ உன் எண்ணம்போல் நடந்தால் நல்லதுதான்!

[கடிகாரத்தில் மணி ஒன்று அடிக்கிறது: அரண்மனையும் மலேரியா சுரமும் கண்ணயர்கின்றன.]

காட்சி 2.

இடம் :—ஆகாகான் அரண்மனை.

காலம் :—காலை 7½ மணி. (மே 6உ)

[ஆகாகான் அரண்மனையின் கண்களிலிருந்து ஜலம் பெருகுகிறது. மலேரியா சுரம் அதற்குத் தேறுதல் சொல்லுகிறது.]

மலேரியா :—ஏன் அழுகிறாய்? காந்திஜியைத்தான் விடுதலை செய்து விட்டார்களே?

அரண்மனை :—இத்தனை நாள் அவருடன் பழகி விட்டேனல்லவா? இப்போது அவரை விட்டுப் பிரிவதென்றால் துக்கமா யிருக்கிறது. ஐயோ! மகாத்மாஜியைப் பிரிந்து நான் எப்படி இருப்பேன்? விசுவாமித்திரருடன் ராமரைக் காட்டுக்கு அனுப்பும்போது தசரதர் மனம் கலங்கியதைப் போல் இப்போது என் மனமும் கலங்குகிறதே!

மலேரியா :— விசுவாமித்திருடைய யாகத்தை இராமர் வெற்றிகரமாக முடித்துக் கொடுத்தாரல்லவா? அதே மாதிரி காந்திஜியும் சுயராஜ்ய யாகத்தை நடத்திப் பூரண கும்பத்தைப் பெறப் போகிறார். நீ கவலைப்படாதே! போய்வரட்டுமா?

அரண்மனை :—ரொம்ப சரி; ஆனால் ஒன்று. காந்திஜியை விடுதலை செய்தது போல், அவரை விட்டு நீயும் விடுதலை அடைந்துவிடு. அப்போதுதான் உனக்கும் காந்திஜிக்கும் லோகத்துக்கும் க்ஷேமம். என்ன தெரிகிறதா?

['ஓ! அப்படியே' என்று சொல்லிவிட்டு மலேரியா சுரம் மகாத்மாஜியுடன் வெளியேறுகிறது. ஆகாகான் அரண்மனை வெறிச்சென்றாகிறது.]

ஐந்து ரூபாய் பரிசு: சென்ற இதழில் வெளியான "அதிசயக் கணக்கு" என்னும் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: டி. ஆர். மாதவன், 22, புத்தூர் அக்ரகாரம், திருச்சி.



முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்!
புவிக்குளே முதன்மை யுற்றாய்!

அவரை விடுதலை செய்யும்படி கட்டாயப்படுத்தக் கூடிய பெரும் பிரயத்தனத்தை நாம் செய்து விடவில்லை.

அரை குறையாகச் செய்த முயற்சிகள் நிஷ்பலனாயின; போட்ட கூச்சல்கள் செவிடன் காதில் ஊதிய சங்காக முடிந்தன.

எத்தனையோ மகா நாடுகள் கூடின; மகாத்மாவை விடுதலை செய்ய வேண்டுமென்று தீர்மானங்கள் செய்தன. அத்தீர்மானங்களை யெல்லாம் அதிகார வர்க்கத்தார் குப்பைக் கூடையில் போட்டார்கள்.

'தேசீய'ப் பத்திரிகாசிரியர்கள் 115 பேர் சேர்ந்து ஒரு பெரிய விண்ணப்பம் தயாரித்துக் கையெழுத்திட்டு அனுப்பினார்கள்.

"உங்கள் வேலையைப் பாருங்கள்; யுத்த விளம்பரங்களைப் போடுங்கள்!" என்று பிரிட்டிஷ் சர்க்கார் பதில் அளித்தார்கள்.

கடைசியாக மலேரியா சுரம் வந்து சிறையின் பூட்டை உடைத்தது; மகாத்மாவை விடுதலை செய்தது!

நாற்பது கோடி மக்களாலும், அவர்களுடைய தலைவர்களாலும் பத்திரிகைகளினாலும் செய்ய முடியாத காரியத்தைக் கேவலம் கொசுக்கள் செய்து முடித்தன!

இது நமக்கும் பெருமை தரும் விஷயமன்று; நாம் மகிழவேண்டிய நிலைமையும் அன்று.

* * *

நமது முன்னோர்கள் செய்த புண்ணியத்தின் பயனாக மகாத்மா காந்தியை நமது தலைவராகப் பெற்றோம். உலகத்தில் வேறெந்த தேசமும் பார்த்துப் பொறாமைப்படக் கூடிய பாக்கியத்தை நாம் அடைந்தோம்.

ஆனால் அப்பேர்ப்பட்ட தலைவரைப் பெறத் தகுதியுள்ளவர்களாக நாம் நடந்து கொள்ளவில்லை.

மகாத்மா நம்மிடம் எதிர்பார்த்ததை ஒரு தடவையாவது நாம் பூரணமாக நிறைவேற்றவும் இல்லை.

ஆயினும் மகாத்மாவின் உன்னத குணத்தினால் அவர் நம்மிடம் இன்னமும் நம்பிக்கை யிழக்காமல் இருந்து வருகிறார்.

1920-ம் ஆண்டில் மகாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கத்தைக் கொண்டு வந்தபோது தேசத்தில் அதற்குப் பிரமாதமான வரவேற்பு இருப்பதாகத் தோன்றிற்று; காங்கிரஸ் மகாசபை அத்திட்டத்தை ஒப்புக் கொண்டது.

ஆனால், காரியத்தில் என்ன நடந்தது? மிகப் பெரும்பாலான மாணாக்கர்கள் கலாசாலைகளை விடவில்லை.

மிகப் பெரும்பாலான வக்கீல்கள் கோர்ட்டுகளைப் பகிஷ்கரிக்கவில்லை.

மிகப் பெரும்பாலான சட்டசபை ஸ்தானங்கள் காலியாக இருக்கவில்லை.

பிற்பாடு மகாத்மா படித்த வகுப்பாரை முழுதும் நம்புவதில் பயனில்லை என்று கண்டு, சர்வ ஜனங்களுக்கும் பொதுவான நிர்மாணத் திட்டத்தை வெளியிட்டார். கதர், ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை, தீண்டாமை விலக்கு என்னும் மூன்றும் நிர்மாணத் திட்டத்தில் முக்கியமானவை.

அவை என்ன வாயின?

தேச மக்களில் நூற்றுக்கு ஒருவர் இருவருக்கு மேல் கதர் கட்டவில்லை.

மற்ற இரு திட்டங்களும் எவ்வளவு தூரம் நிறைவேறி யிருக்கின்றன என்று சொல்ல வேண்டியதில்லை.

மகாத்மாவின் தவமும் தியாகமுமே தேசத்துக்குச் சுயராஜ்யம் கொண்டு வந்து விடுமென்று பாமர ஜனங்கள் நம்பி யிருந்து விட்டார்கள். படித்தவர்களோ தொண்டை கிழியக் கத்துவதோடும், பேனா ஒடிய எழுதுவதோடும் நம்முடைய கடமை தீர்ந்து விட்டதென்று எண்ணி யிருந்தோம்.

இவ்விதம் மகாத்மாவை ஏமாற்றி நம்மையும் ஏமாற்றிக் கொண்டு இத்தனை நாளும் காலம் கழித்தாகி விட்டது.

மேற்கூறிய ஏமாற்ற முறையை இனி மேலாவது நாம் மாற்றிக் கொள்ளவேண்டும்.

மகாத்மாவினிடம் நம்முடைய பக்தி உண்மையான பக்தியானால் காரியத்தில் அவர் சொல்லுவதைப் பரிபூரணமாகப் பின்பற்றி நடக்க வேண்டும். அல்லது, "இவ்வளவுதான் எங்களால் முடியும்; இதற்கு மேல் முடியாது" என்றாவது தெரிவித்து, நமக்குத் தகுந்த வேலைத் திட்டத்தைக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ள வேண்டும்.

அப்போதுதான் காந்தி மகானைத் தலைவராகப் பெறுவதற்கு நாம் தகுதியுடையவர்களாவோம்.

அப்போதுதான் தேசத்துக்கும் விமோசனம் உண்டு.

பூட்டு உடைந்தது!

கல் மனம் கரைந்தது!

சிறைக் கதவு திறந்தது!

நாற்பது கோடி மக்களின் மன வேதனை தீர்ந்தது!

மகாத்மா விடுதலையடைந்தார்!

உலகெங்குமுள்ள நல்ல மனிதர்கள் பெருமூச்சு விட்டார்கள்! மனித சமூகத்துக்கு நல்ல கதி உண்டு என்று அவர்கள் ஆறுதல் பெற்றார்கள்!

* * *

ஆகாகான் அரண்மனையாகிய சிறைக்குள்ளே மகாத்மா இருபது மாதத்துக்கு முன்னால் பிரவேசித்த போது, அறுபது வருஷம் அவருடைய வாழ்க்கைத் துணைவியாக இருந்த அன்னை கஸ்தூரிபாயும், இருபத்தைந்து வருஷம் அவருடைய அந்தரங்கத் தொண்டராயிருந்த ஸ்ரீ மகாதேவ தேஸாயும் அவருடன் அச் சிறைக்குள்ளே பிரவேசித்தார்கள்.

ஆகாகான் அரண்மனையிலிருந்து மகாத்மா வெளியே வந்தபோது அவர்கள் கூட வரவில்லை.

அந்த இரு வாழ்க்கைத் துணைகளையும் தகனம் செய்த இடத்தில் கண்ணீரில் நனைந்த புஷ்பங்களைத் தூவி விட்டு மகாத்மா தன்னந்தனியாக வெளியே வந்தார்.

* * *

பெயர் பெற்ற பிரிட்டிஷ் பிடிவாதம் ஏதோ இப்போதாவது தளர்ந்தது பற்றி மகிழ்ச்சியடைகிறோம். நல்ல காரியத்தை, சரியான காரியத்தை, இவ்வளவு காலந் தாழ்ந்தாவது செய்தது பற்றி உவகையடைகிறோம்.

உலக சிரேஷ்டர் என்று கொண்டாடப்பெற்ற மகானை, — இந்திய மக்களின் ஒப்பற்ற தலைவரை பிரிட்டிஷ் சர்க்கார் சிறைப்படுத்தியது பெரிய பிசகு; வழக்கின்றி விசாரணையின்றி அவரை இத்தனை காலமும் சிறையில் வைத்திருந்தது அதைவிடப் பெரிய பிசகு; இன்னமும் அவரைச் சிறையிலேயே வைத்திருந்தார்களானால், அது என்றைக்கும் மன்னிப்பில்லாத மகத்தான பாதகமாயிருந்திருக்கும். அந்தப் பாதகத்துக்கு ஆளாகாமல் தப்பியது பற்றி பிரிட்டிஷ் சர்க்காருக்கு வாழ்த்துக் கூறுகிறோம்.

மகாத்மா விடுதலையடைந்து 'பர்ண குடி'க்குச் சென்றவுடனேயே அவருடைய இரத்த ஓட்டத்தில் ஓரளவு அபிவிருத்தி காணப்பட்டது என்று தெரியவருகிறது.

சிறைவாசத்தின் கொடிய இயல்பை அறிந்தவர்களுக்கு இதில் ஆச்சரியம் ஒன்றும் இராது.

அரண்மனையில் வைத்திருந்தாலும் சிறை சிறைதான்; எத்தகைய தீர வைராக்கிய புருஷராயிருந்தாலும், 'சிறையிலிருக்கிறோம்' என்ற எண்ணமே இரத்த ஓட்டத்தைக் குறைத்து இருதயத்தைப் பலவீனப் படுத்தப் போதுமானது.

எழுபது வயதுக்கு மேற்பட்ட தள்ளாத நிலையில், உண்ணாவிரதம் முதலியவற்றினால் தளர்ந்த மகாத்மாவின் உடம்பு சிறையில் நாளுக்கு நாள் நலிந்து வந்ததில் ஆச்சரியமில்லை; விடுதலையானதும் அபிவிருத்தி காட்டுவதிலும் வியப்புக் கிடையாது.

"உடம்பை குணப்படுத்திக் கொள்வது என் முதல் காரியம்" என்று மகாத்மா தெரிவித்தது நமக்கு எல்லையற்ற மகிழ்ச்சி தருகிறது. அந்த முதல் காரியத்தில் அவர் பரிபூரண வெற்றியடைவார் என்று நம்புகிறோம். குறைந்த பட்சம் நூறு வயது அவர் வாழ்ந்து வாழ்க்கையாகிய இருளில் நமக்கெல்லாம் வழிகாட்டியருள்வார் என்று நம்புகிறோம்.

* * *

காந்தி மகான் விடுதலையடைந்தது குறித்து நாம் எல்லையற்ற குதூகலம் அடைய நியாயம் உண்டு.

ஆனால் அவர் விடுதலையடைந்த விதத்தைப் பற்றி நாம் மகிழ்ச்சியடையவோ, பெருமை கொள்ளவோ காரணம் இல்லை.

நம்முடைய முயற்சியினாலே, நாற்பது கோடி மக்களின் தீரப் பிரயத்தனத்தினாலே, மகாத்மா விடுதலையடைந்து விடவில்லை.

வழக்கின்றி, விசாரணையின்றி, இந்திய மக்களின் ஒப்பற்ற தலைவர் பிரிட்டிஷ் சிறையில் இருபது மாதம் இருந்தார்!

ஓய்வும் வேலையும்

-உம்மன்



மகாத்மா விடுதலையும்


மகாத்மாவை ஓய்வு எடுத்துக்கொண்டு உடம்பைப் பார்த்துக்கொள்ளச் சொல்லித் தந்திகளும் கடிதங்களும் வந்து குவிந்தன.
வழக்கம்போல் பத்திரிகை நிருபர்கள் வந்து கேள்விகள் கேட்டு மகாத்மாவின் மௌன பதில்களைக் குறித்துக்கொண்டார்கள்.
வைத்தியர்கள் விதவிதமான மருந்துகளுடனும் சிகிச்சை முறைகளுடனும் மகாத்மாவின் உதவிக்கு வந்தார்கள்.

நிகழ்ச்சிச் சித்திரம்



கல்கி

மலர் 3 | தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 31

என்ன சேதி?

பிரயோசனம் இல்லை!

மகாத்மா காந்தியின் விடுதலையினால் இந்தியா தேசமே ஆனந்தத்தில் மூழ்கியிருக்கும் சமயத்தில் "அதனால் ஒரு பிரயோசனமும் இல்லை!" என்று இங்கிலாந்தில் ஒரு குரல் எழுந்தது. இந்தியாவினிடம் அனுதாபமுள்ள குரல்தான் அது. "பண்டித ஜவாஹர்லால், மௌலானா ஆஸாத் முதலியவர்களையும் விடுதலை செய்யவேண்டும். இல்லாவிடில் மகாத்மாவின் விடுதலையினால் மட்டும் **அரசியல் துறையில்** ஒரு பிரயோசனமும் ஏற்படாது!" என்று அந்த இங்கிலாந்து அனுதாபி தமது அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்தியிருக்கிறார்.

யார் சொன்னது?

ஆனால், மகாத்மா விடுதலையினால் அரசியல் பிரயோசனம் உண்டு என்று நம்பியோ, எதிர்பார்த்தோ இந்திய சர்க்கார் அவரை விடுதலை செய்தார்களா? கிடையாது. இந்திய அதிகார வர்க்கத்தார் மெனக்கட்டுப் பத்திரிகைக்காரர்களைக் கூப்பிட்டனுப்பி "மகாத்மா காந்தியின் விடுதலை தேக அசௌக்கியத்தைக் குறித்த விடுதலைதான்; அதில் அரசியல் நோக்கம் ஒன்றுமே கிடையாது!" என்று வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.

நம்மைப் பொறுத்த வரையில், "இதே விதமான அரசியல் பிரயோசனமற்ற விடுதலையை ஜவாஹர்லால், ஆஸாத் முதலியவர்களுக்கும் அளித்துவிடுங்கள்!" என்று அதிகார வர்க்கத்துக்குச் சொல்ல விரும்புகிறோம். அரசியல் நோக்கமே வேண்டாம்; நியாயத்தையும் தர்மத்தையும் கருதி விடுதலை செய்தால் போதும். நமது அரும்பெரும் தலைவர்கள் சிறையிலிருந்து தேக சௌக்யத்துடன் வெளியில் வருவதையே பெரிய பிரயோசனமாகக் கருத நாம் தயாராயிருக்கிறோம்.

அர்த்தமில்லா வித்தியாசம்

இருபது மாதத்துக்கு முன் சிறையில் அடைக்கப்பட்ட காங்கிரஸ் வாதிகளுக்குள்ளே சிற்சிலரை ஆங்காங்கே சர்க்கார் விடுதலை செய்து வருகிறார்கள்; வேறு சிலரை விடுதலை செய்யவில்லை. இவ்வித வித்தியாசம் பாராட்டுவது அர்த்தமில்லாத காரியம். ஸ்ரீ அவினாசிலிங்கத்தை விடுதலை செய்வானேன், ஸ்ரீ பக்தவத்ஸலத்தைச் சிறையிலே வைத்திருப்பானேன்? வேலூர் சேர்மன் ஸ்ரீ சோமசுந்தரத்தை விடுதலை செய்வானேன், காஞ்சி சேர்மன் டாக்டர் சீனிவாசனை விடாமல் வைத்திருப்பானேன்? ஸ்ரீ ஜகந்நாததாஸை விடுதலை செய்துவிட்டு ஸ்ரீ யக்ஞேசுவர சர்மாவை அடைத்து வைத்திருப்பது என்ன பொருத்தம்?

கொடுமை செய்யாதீர்!

மதுரை ஸ்ரீ ஏ. வைத்திநாதய்யர் ஹரிஜன சங்கத்தின் தலைவர், — அரசியல் தொண்டைக் காட்டிலும் நிர்மாணத் தொண்டில் அதிகமாக ஈடுபட்டவர், — என்பதைத் தமிழ்நாடே நன்கறியும். அவரைச் சிறை செய்திருக்கவே கூடாது. இன்னமும் அவரை விடுதலை செய்யாதிருப்பது என்ன நியாயத்தைச் சேர்ந்தது என்பது ஆண்டவனுக்கும் ஆண்டவனை விடப் பெரிய அதிகார வர்க்கத்துக்குந்தான் தெரியும்! ஸ்ரீ எம். பக்தவத்ஸலம் முதலிய தமிழ்நாட்டுக் காங்கிரஸ் வாதிகள் சிலர் இன்னமும் மத்திய மாகாணச் சுடுகாட்டுச் சிறை ஒன்றிலே வைக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம். இந்தக் கடும் கோடை காலத்தில் அவர்களை அவ்விதக் கொடிய வெயில் பிரதேசத்தில் வைத்து வதைப்பது மகா அநீதி; பெருங் கொடுமை. அவர்களை விடுதலை செய்யா விட்டால் தமிழ் நாட்டிலுள்ள சிறை ஒன்றுக்காவது உடனே மாற்ற வேண்டும்.

கல்கி

பொருளடக்கம்

மலர் 3 இதழ் 31 | 1944 மே 14 | தாரண ௵ வைகாசி 1

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.



★

நமது தலைவர் ராஜாஜி சமீபத்தில் ஆகாய மார்க்கமாக இலங்கைக்குச் சென்றிருந்தார். ஹட்டனில் நடந்த இலங்கை இந்தியர் காங்கிரஸில் அக்கிராசனம் வகித்தார். கொழும்பிலும் மற்றும் பல இடங்களிலும் பத்தாயிரம், இருபதாயிரம் என்று இந்தியர்களும் சிங்களவர்களும் கூடியிருந்த பெரிய பொதுக் கூட்டங்களில் பேசினார். கொழும்பு நகர சபையாரும் மற்றும் பிரபல இந்தியத் தலைவர்களும் சிங்களத் தலைவர்களும் அளித்த வரவேற்புகளை ஏற்றுக் கொண்டார். இவ்விதம் இந்தியாவையும் இலங்கையையும் பிரிக்கும் ஆழமில்லாத கடலின் மேல் நிரந்தரமான ஒற்றுமைப் பாலத்தை நிறுவுவதற்கு அஸ்திவாரத்தை அமைத்தார். இவ்வளவுடன், அன்னை கஸ்தூரிபாய் ஞாபகார்த்த நிதிக்கு ரூ 18,000 சொச்சம் வசூலித்துக் கொண்டு இந்தியாவுக்குத் திரும்பினார்.

★

சரஸ்வதி கான சபா, சிதம்பரம்

21—5—'44 ஞாயிற்றுக்கிழமை யன்று இரவு 9-30 மணிக்கு

வள்ளித் திருமணம்

(அரிய நாடகம்)

ஸ்ரீமான் S. V. சுப்பய்யா பாகவதர் — வேலன், வேடன், விருத்தன்
ஸ்ரீமதி N. M. சுந்தராம்பாள் — வள்ளி
ஸ்ரீமான் K. S. தேவுடு அய்யர் — ஹார்மோனியம், பின்பாட்டு

டிக்கட்டுகள் (வரியுள்பட) ரூ. 2-11-11 ; 1-9-11 ; 0-12-0

R. S. ராமானுஜம், செக்ரடரி

திருச்சி முனிசிபல் பப்ளிக் ஹாலில்

11 - 5 - 1944 வியாழக்கிழமை முதல்
நானிலம் புகழும் 4-வது வாரம்

காரைக்குடி ஸ்ரீ ராம பால கான விநோத சபையாரின்

தாக சாந்தி

என்னும் சீர்திருத்த நாடகம்
தினசரி இரவு 10 - 30 மணிக்கு

குறிப்பு:— 29 - 4 - 44ல் திருச்சி பிரின்சிபல் ஜில்லா முன்சீப் கோர்ட்டில் "தாக சாந்தி" நாடகத்தை நிறுத்தும்படி திருவானைக்காவல் சுப்பையா பிள்ளை முதலிய மூவர்கள் கேட்ட மனு உத்திரவாக வில்லை. "தாக சாந்தி" நாடகம் தற்சமயம் வெற்றிகரமாக நடைபெறுகிறது. அன்பர்கள் கண்டு ஆனந்தமடையுங்கள்.

பிரதி புதன்கிழமைதோறும் நாடகம் கிடையாது.

இ. ஸி. ஸ்கூல்

திருவனந்தபுரம்.

•

உங்கள் வீட்டிலிருந்து கொண்டே உங்கள் ஜோலிகளுக்கு இடையூறு எதுவுமின்றி ஒரே வருடத்தில், எ. பி. ஸி. முதல் தொடங்கி ஆங்கிலத்தில் நாலாவது பார அறிவு பெறலாம். தொடர்ந்து பயிலின் மூன்றே வருடங்களில் ஸீனியர் கேம்பிரிட்ஜ், மெட்ரிக்குலேஷன் முதலிய பரீட்சைகள் தேறலாம். இடையில் பாடசாலைகளில் கல்வி நிறுத்தியவர் தொடர்ந்து பயிலலாம். பேராசையுடையாரும், அவசியமுள்ள செலவும் பிரயத்தனமும் செய்ய சக்தியுள்ளாரும் தாங்கள் கடைசியாக கற்ற வகுப்பும் காட்டி விபரங்கட்கு காலணா ஸ்டாம்புடன் மேற்காணும் விலாஸத்தில் எழுதவும்.

அரவிந்த்

நாள்பட உழைக்கும் துல்லிய ஆடைகள்

எல்லா தினுசு உடைகளுக்கும் உதவும் உயர்ந்த தேச வுத் துணிகளைத் தயாரிப்பதில் பிரசித்தி பெற்ற மில் முத்திரையைப் பாருங்கள்.

நூல் சேலை ★ வேஷ்டி ★ ஷர்ட்டிங்கு ★ டுவில்
கிரேப்பு ★ பாப்லின் ★ நேன்ஸுக் ★ மல்
லான் ★ டோரியா ★ வாயில்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட்,
அஹமதாபாத்

வியாபாரிகளும், விற்பனையாளர்களும் வேண்டும்.


AY. 9—Tamil



அருமை நண்பர்களே!

இவைகளில் எதை

நீங்கள் விரும்புகிறீர்கள்?



ஸ்வஸ்திக் டாய்லட் சோப்புகள்.

இந்த ஐந்து ஸ்வஸ்திக் சோப்புகளில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுங்கள். நீங்கள் நிச்சயம் திருப்தியடைவீர்கள்.

வருஷக்கணக்கான ஆராய்ச்சி, நன்கு பரீக்ஷை செய்த மூலப் பொருள்கள், சுத்தமான தாவர எண்ணெய், சோதித்தமான வாசனைகள் இவைகளெல்லாம் ஒருங்கே சேர்ந்து இவைகளை சோப்புகளை மிகவும் சிறந்தவைகளாகச் செய்கின்றன.

இந்த ஐந்து சகலரும் ஆரோக்கியத்தை அபிவிருத்தி செய்வதிலும், சருமத்தை அழகுபடுத்துவதிலும் இணையற்று விளங்குகின்றன.

காந்தி தனது மிருதுவான வாசனையால் உங்களைப் பரவசப்படுத்தும்.

ஷிகாகாய் உங்களது கேசத்தைப் பக்குவப்படுத்தும்.

சாண்டல்வுட் தன் மென்மையான வாசனையினால் உங்களுக்கு மகிழ்வூட்டும்.

கஸ் தன்னுடைய குளிர்ச்சியால் உங்களைக் குளிர்விக்கும்.

நீம் கிருமிகளை அறவே நாசம் செய்து விடும்.

இவைகளில் ஏதேனும் ஒன்றை நீங்கள் உபயோகித்துப் பாருங்கள். உங்கள் சருமம் ஆரோக்கியமாயும் அழகாகவும், சோபிதமாகவும் அமைவதைக் காண்பீர்கள்.

R.S.P.C.

THE SWASTIK OIL MILLS LTD., BOMBAY.15

செல்ஸ் டிப்போ: 158-B. பிராட்வே, ஜி. டி., மதராஸ்.



ஊக்கம், உற்சாகத்துடன் தமது இயற்கையழகையும் கெடாமல் காக்க விரும்பும் ஸ்திரீகள் நரஸுஸ் காபி, டீயையே விரும்புகிறார்கள். ஏன்? அவை ஆரோக்கியத்தையும், சுறு சுறுப்பையும் அளிக்கும் உயரிய பானங்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். நரஸுஸ் காபி, டீ இந்தியத் தயாரிப்பில் தலைசிறந்தவை என்பது தெரிந்தது தானே.

நரஸுஸ்

இந்தியத்தயாரிப்பில் தலைசிறந்தது

நரஸுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி

சேலம் தென்னிந்தியா

MNK-23-TM

படவுலகிற்குப் பெருமையும்
பார்ப்போருக்கு மகிழ்ச்சியும் தரும்
பிரகதியின் சிறந்த படம்!

★

தமிழ்

ஹரிச்சந்திரா

★

தென்னாட்டில் பல இடங்களில்
வெற்றிகரமாக நடைபெறுகிறது

★

டிஸ்டிரிபியூட்டர்கள் :

FAMOUS TALKIE DISTRIBUTORS

MADRAS — MADURA — BANGALORE — BEZWADA